# கிழக்கின் பேரொளி மறைந்தது!


சுதந்திரன்


SUTANTIRAN

தொலை பேசி: 23411 விலை சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, புரட்டாதி 27 (13-10-74) ஞாயிறு அக். 13 றமழான் 26 புத்தகம் 28 இதழ் 7


## "ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு" தந்தை செல்வா கண்ணீர்!

தமிழ் ஈழம் முழுவதும் துயரவெள்ளம்!



இழக்கிலங்கையின் விடுதலைப் பேரொளி மறைந்து விட்டது! குலையாத உறுதியும் குன்றாத இலட்சிய உணர்வும் கொண்டிருந்த கொள்கைக் குன்றை தமிழ்ச் சமுதாயத்திடமிருந்து சோதனைமிகுந்த இக்கால கட்டத்தில் சொல்லாமல் கொள்ளாமல் காலதேவன் திடுதிப்பென்று பறித்துக்கொண்டுவிட்டான்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தளகர்த்தர்களில் ஒருவரும் தமிழர் கூட்டணியின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான முன்னாள் பட்டிருப்பு பா. உ. திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவர்களின் திடீர் மறைவால் தமிழர் சமுதாயம் ஆற்றுவாரும் தேற்றுவாரும் இன்றி இன்று அலறித் துடித்து அரற்றி நிற்கிறது.

—8-ம் பக்கம் பார்க்க

● பிரதமர் விஜயத்தின் விளைவு;

# நல்லூர்க் கந்தனுக்கு $13\frac{1}{2}$ மணிநேரம் தடுப்புக் காவல்!

## சிறிமாவின் கண் எதிரிலேயே வீரத் தமிழ்ப் பெண்கள் உண்ணாவிரதம்!

## அறப்போரை மீண்டும் காண அஞ்சி அம்மையார் வேறு வழியால் ஓட்டம்!

பிரதமர் திருமதி பண்டாரநாயகாவின் யாழ்ப்பாண விஜயத்தை எதிர்த்து நடைபெற்ற ஹர்த்தாலும் பகிஷ்கரிப்பும் பூரண வெற்றியடைந்தது. மக்களின் எதிர்ப்பின் விளைவாக "மக்கள்" பிரதமரால் நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு சாதாரணமாக வழிபடச் செல்லமுடியாத நிலையேற்பட்டது! மேற்படி கோவில் பகுதியின் நான்கு பக்கமும் முள்ளுக் கம்பி வேலி போட்டுத் தடுக்கப்பட்டு—இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட ஆயுதம் தாங்கிய பொலிசாரும் ஏராளமான சி. ஐ. டி.யினரும் காவல் புரிய அம்மையார் முருகனை வழிபட்டார்!

அம்மையார் முருகனை வழிபடுவதற்காக— முருகக் கடவுளுக்கும் சுமார் $13\frac{1}{2}$ மணி நேரம் 'தடுப்புக்காவல்' போடப்பட்டது. முருகனை வழிபட வந்த ஏனைய அடியார்கள் பொலிசாரால் துரத்தப்பட்டனர்.

இவ்வளவு கெடுபிடிகளுக்கும், பொலிசாரின் பயமுறுத்தல்களுக்கும் மத்தியிலும்— வீரத் தமிழ்ப் பெண்கள் தியாகி சிவகுமாரனின்வீரத் தாயார் திருமதி அன்னலட்சுமியின் தலைமையில் திட்ட

—4-ம் பக்கம் பார்க்க

## தமிழ் இளைஞர்கள் 10 பேர் கைது!

தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த சுமார் 10 இளைஞர்கள் பிரதமர் விஜயத்தின்போது பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலைசெய்யப்பட்டனர். திருவாளர்கள் அ. வரதராசன், கா. நல்லையா, அ. விக்டர், பொ. மதிமுகராசா, ச. ஜெயராசா, ஜீவா, யுவன், றஞ்சித் எட்வின் கிறைஸ்ற், மாதகல் கனகலிங்கம் ஆகியோரே கைது செய்யப்பட்ட இளைஞர்களாவர்.

# யாழ்ப்பாண நகர வீதிகள் அதிர்ந்திட 4000 தமிழ் இளைஞர்கள் நடை பவனி!

## பிரதமர் வருகையை எதிர்த்து கண்டன ஊர்வலம்! துரோகிகள் பதுங்கினர்; தோள்தட்டியெழுந்தது தமிழர் படை!

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு எனும் முப்பெரும் ஆயுதங்களை ஏந்தி, அஞ்சாநெஞ்சத்தினராய், எதற்கும் துணிந்தவர்களாய் சுமார் நாலாயிரத்துக்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னமான பிரதமரின் யாழ் வருகையை பகிஷ்கரித்து கடந்த 4ம் திகதிமாலை யாழ் நகரத்தின் முக்கிய வீதிகள் வழியாக நடத்திய அமைதியான நடைபவனி அனைவர் உள்ளத்தையும் வெகுவாகக் கவர்ந்தது:

'பிரதமர் வருகையை எதிர்த்து தமிழர் கூட்டணியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினால் பொலிசார் நடவடிக்கை எடுக்கமாட்டார்கள்—சிறீலங்கா சுதந்திரக் கட்சி குண்டர்களே எதிர் நடவடிக்கையை எடுப்பார்கள்' என்ற திடீர் அமைச்சரின் வன்முறையைத் தூண்டக் கூடிய பயமுறுத்தல் ஒரு புறமும்—

துரோகப்பரின் காடையர் கூட்டம் ஊர்வலத்தில் வருவோரை வழி மறித்துத் தாக்கவிருப்பதாக பரப்பப்பட்ட வதந்தி ஒரு புறமும்—

வெறிகொண்டு யாழ் நகர வீதிகளில் டிறக்குகளிலும், ஜீப்புக்களிலும் ஆயுதபாணிகளாக அலைந்து திரிந்த பொலிசார் அடித்துநொருக்குவார்களோ — சுட்டுப் பொசுக்குவார்களோ— என்கிற ஐயம் ஒருபுறமும் எழுந்திட—

இவையெதையும் பொருட்படுத்தாதவர்களாய்—வைர நெஞ்சுடன் திட்டமிட்டபடி இந்த ஊர்வலத்தை முன்னின்று நடத்திய தமிழ் இளைஞர் பேரவையினரை எல்லோருமே வாழ்த்தினர். 'நாம் யார்க்கும் குடியல்லோம்' என்ற சுலோகம் பொறிக்கப்பட்ட பாட்ஜ்களை சட்டையிலே தாங்கி— கைகளையும் வாயையும் கறுப்புத்துணியால் கட்டியபடி, யாழ் கோட்டை

—5-ம் பக்கம் பார்க்க

## நிலபாவாடை விரித்த துரையப்பாவுக்கு வெகுமதி!

பிரதமருக்கு நிலபாவாடை விரித்த யாழ்மேயர் துரையப்பாவுக்கு கிடைத்துள்ள வெகுமதி இதோ!-

யாழ் மாநகரசபை உட்பட மூன்றுஉள்ளூராட்சி சபைகளின் ஆயுள் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

## யாழ்எம்.எம்.சி. கைது!

பிரதமரின் யாழ் விஜயத்தின்போது யாழ் மாநகர உறுப்பினர் திரு. தம்பு கந்தையா அவர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு, இரு தினங்களின் பின் விடுதலைசெய்யப்பட்டார். துரோகப்பரின் கட்டளைப்படியே இது நடந்ததாம்!

## வாழ்க சேனாதிராசா

● தமிழ் இளைஞர்களின் தலைவரும், தமிழரசுக் கட்சி வாலிப இயக்கத்தின் செயலாளரும் தன்மான வீரருமாகிய மாவை சோ. சேனாதிராசா அவர்களின் 32வது பிறந்த நாள் 11.10.74ல் ஆகும்.

கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள அரசால் சிறையிடப்பட்டிருக்கும் சேனாதிராசாவின் பிறந்த நாளன்று, அவரது குடும்பத்தினருக்கு உதவும் முகமாக பணமுடிப்பொன்றை காங்கேசன்துறை இளைஞர்கள் வழங்குகின்றனர்.



### அடுத்தவாரம்— படங்களுடன் மேலும் செய்திகள்!

பிரதமரின் யாழ் விஜய பகிஷ்கரிப்புப்பற்றி சூடும் சுவையும் நிறைந்த இன்னும் பல செய்திகள் அடுத்தவார சுதந்திரனில் புகைப்படங்களுடன் இடம்பெறும். —ஆர்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கென தனித் தொகுதி உருவாக்கப்படுவது அவசியம்!

அக்கரைப்பற்று 16000க்கும் மேற்பட்ட தமிழர்கள் வதிகின்ற ஒருபெரிய கிராமமாகும். இது தற்போது நிந்தவூர்த் தொகுதியோடு சேர்ந்துள்ளது. அண்மையில் அரசாங்கத்தினுல் தொகுதி நிர்ணயக்கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டு, தொகுதி பிரிப்பு வேலைகளுக்குப் பிரமுகர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளனவல்லவா? அதன்படி, அக்கரைப் பற்றிலுள்ள பல தமிழ்ப் பிரமுகர்களும் ஒன்றிணைந்து 'தமிழர் மகாசபை' ஒன்று அமைத்து, அக்கரைப்பற்றுத் தமிழர்களுக்கு ஒரு தனித்தொகுதி ஏன் தேவை என்பதற்கான காரணங்களை எடுத்துக்காட்டி, அதைப் பெறப்பல வகைகளிலும் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

இதே வேளையில், அக்கரைப்பற்றுத் தென்பகுதியிலுள்ள தமிழ்க் கிராமங்களான தம்பட்டை, தம்பிலுவில், திருக்கோயில் என்னும் கிராமங்களையும் அக்கரைப்பற்றுத் தமிழ்ப்பகுதியோடு இணைத்து ஒரு பெரும் தமிழ்த்தொகுதியை உருவாக்கிட முயற்சிகள் நடைபெறுகின்றன. எது எவ்வாறிருப்பினும் இப்பகுதித் தமிழருக்குத் தனித்தொகுதி நிச்சயம் வேண்டும் என்னும் கோரிக்கை இங்கு வலுப்பெற்றிருக்கின்றது.

தமிழருக்கெனத் தனித் தொகுதி, தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இல்லாத காரணத்தினுல், இங்குள்ள தமிழ் மாணவர்களின் கல்விக்கும், தமிழ் ஆசிரியர்களின் சேவைக்கும், தமிழ்ப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் ஏற்பட்ட இடைஞ்சல்கள் சொல்லுந்தரமன்று. ஆசிரியர்களின் திடீர் இடமாற்றங்களும், அரசாங்கத்தால் தமிழ்ப் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் விஞ்ஞான, விவசாய, மனையியல் உபகரணங்கள் முற்றுமுழுதாகக் கிடைக்காமல் வேறு பாடசாலைக்குக் கைமாறும் அவல நிலையும் தமிழ்ப் பாடசாலைகளுக்கென ஒதுக்கப்படும் கட்டிட நிதிகள் கிடையாமற்போவதும், இங்கு அடிக்கடி விஜயம் செய்யும் அரசாங்கப் பிரமுகர்களின் போலிவாக்குறுதிகளை நம்பித் தமிழ் மக்கள் ஏமாறுவதும், நாங்கள் பல ஆண்டு காலமாக அவதானித்து, ஒன்றும் செய்ய முடியாது ஏங்கிக் கண்ணீர் வடிக்கு காட்சிகள்.

இக்கிராமப்புறங்களின் கல்வித்தரம் குறைந்ததற்குக் காரணம் இதைவிட வேறு என்ன சொல்லமுடியும்? எனவே தமிழர்களுக்கு நடைபெறும் அநியாயத்தைத் தட்டிக்கேட்க ஆளில்லாமையே எதிரிகளின் கையோங்குவதற்குக் காலாக அமைந்தது.

அத்துடன், அண்மைக்காலமாக இப்பகுதிகளில் ஆளுங் கட்சிகளின் அடிவருடிகளின் கொட்டம் அத்துமீறியுள்ளது. கட்சிக்கிளைகளும், வாலிபமுன்னணிகளையும் அமைத்து அவர்கள் செய்யும் திருவிளையாடல்களைச் சொல்லப்புகின் "நவீன திருவிளையாடற் புராணம்" ஒன்றுதான் எழுதவேண்டிவரும். அவர்கள் விருப்பப்படிதான் எல்லாம். ஆசிரியர்களைக் கண்டபடி இடமாற்றுவது, அதிபர்களைப் பயமுறுத்துவது...இவ்வாறு அடுக்கிக்கொண்டே போகலாம். இதற்குச் சாட்சியாக ஒன்றைக்கூறுவது நலம்.

அண்மையில் அம்பாறையில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் (தேர்தல்) பிரசாரக் கூட்டம் நடைபெற்றதல்லவா? பிரதமரும் வந்தாரல்லவா? அந்தக்காட்சியைப்பார்ப்பதற்கு இப்பகுதி ஆசிரியர்களும், அதிபர்களும்கட்டாயப்படுத்தப்பட்டு, கூட்டத்திற்குச் சமூகமளிக்கத்தவறுவோருக்கு எந்தவித முன்னறிவித்தலுமின்றிப் பதவி பறிபோகும் "என்று எச்சரிக்கை வேறு விடப்பட்டு, பயந்து பயந்து ஆசிரியர்களும், அதிபர்களும் கூட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதை நாங்கள் மறந்துவிடவில்லை. அத்துடன் அக்கூட்டத்திற்காக ஆசிரியர்களிடமிருந்து பணமும் பறித்தெடுக்கப்பட்டது. இந்த விஷயத்தை முன்னின்று நடாத்தி வெற்றி கண்டவர்கள் யாரென்று எண்ணுகிறீர்கள்? சாட்சாத் ஆளுங்கட்சியின் அடிவருடிகளேயாவர். இந்த எச்சில் எலும்பு பொறுக்கிகளுக்குத் தாளம் போடுபவர்களாகவே ஆசிரியர்களும் அதிபர்களும் மாறிக்கொண்டிருக்கிறார்களென்றால் அந்தப் பிரகிருதிகளின் ஆட்டம் எவ்வளவு பாரதூரமான விளைவை ஏற்படுத்திவிட்டது என்று பாருங்களேன்!

இதற்கெல்லாம் காரணம் இல்லாமலில்லை. தமிழர்கள் பேரணியாம் தமிழரசுக் கட்சியும் போரணியாம் தமிழர் கூட்டணியும்இப்பகுதிகளைத் தற்காலிகமாக மறந்துவிட்டதே இதற்குரிய காரணமாகும். தமிழரசுக் கட்சி தனது செல்வாக்கை இப்பகுதிகளில் பிரயோகிக்காததே தமிழ் எதிரிகளின் விஷமத்தனத்திற்கு வழி கோரியதாகும்.

அறப்போர்வீரர் — தமிழின் நாயகன் — அகில இலங்கை அறப்போர் முன்னணித் தலைவன் அரியநாயகம் அவர்களின் மறைவுக்குப் பின்னர் தன்மானம் மிக்க தம்பிலுவில் கிராமத் தமிழர்களின் உணர்ச்சி குன்றியதற்கும் — அங்கு ஆளும் கட்சி அடிமைகளின் செல்வாக்கு ஓங்கியிருப்பதற்கும் வேறு என்ன காரணம் கூறமுடியும்? அறப்போர் வீரர் வாழ்ந்த அருமைத்தமிழ் மண்ணில் அடிமைகள் அரசோச்சுவதா? இதை மானத் தமிழ் மக்கள் இன்னும் பொறுத்துக் கொண்டிருப்பதா?

தமிழரசுக் கட்சித் தலைவர்கள் இந்தப்பக்கம் தலைகாட்டுவதே குறைவு. இங்குள்ள பலருக்குத் தமிழரசுக் கட்சி என்றால் என்ன என்பதே மறந்துகொண்டு போகுமளவுக்கு நிலைமை மோசமாகிக்கொண்டு வருவதை அவதானிக்கும்போது மிகவேதனையாயிருக்கிறது. தலைவர்கள் இங்கு, சரியான முறையில் கவனமெடுத்துக் கொள்கை விளக்கம், தமிழ் உணர்வு, கட்சிப் பற்று, பிரசாரங்கள் செய்ய முன்வருதல் குறைவு—

தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் எடுக்கும் அதே கவனத்தை மட்டக்களப்பிலுள்ள இப்பகுதித்தமிழ்க் கிராமங்களுக்கும் உடனடியாக எடுக்காதுவிட்டால் எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சி கால் ஊன்ற முடியாத அளவுக்கு நிலைமை மோசமாகிவிடக்கூடும் என்று எச்சரிக்க விரும்புகிறோம். மாதத்திற்கு ஒருமுறையாவது இப்பகுதிக்கு வருகை தந்து பொதுக்கூட்டங்களை நடாத்தி, கட்சிப்பற்றையும், இலட்சிய உணர்வையும் ஏற்படுத்தி மக்களைத் திசை திருப்பவேண்டியது தலைவர்களின் கடமையாகும் என்பதைக் கூற விரும்புகிறோம். உடனடியாக இப்பகுதியில் கட்சிக்கிளைகளைப் புனரமைப்புச் செய்து, விறல் மிக்க தொண்டர்களை உண்டாக்க, தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழர்களுக்குத் தனித் தொகுதி வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் இந்த அருமையான வாய்ப்பைத் தமிழ்த் தலைவர்கள் நன்கு பயன்படுத்தி, தமிழரசுக் கட்சியின் செல்வாக்கை இங்கே நிலை நிறுத்தி 'தமிழரசுக் கோட்டையாக' இப்பகுதியை மாற்ற எத்தனிப்பார்களாக.

—அக்கரையூரன்.

புதிய குடியரசு அரசியல் சட்டம் வந்ததன் பின்னர் முதல் தடவையாகவும்— வெள்ளைக்காரனிடமிருந்து நாடு விடுபட்ட பின்னர் மூன்றுவது தடவையாகவும் தேசிய அரசப் பேரவைக்கான தொகுதிகளை புதிய முறையில் அமைப்பதற்கு தொகுதி நிர்ணயக்குழு ஒன்று நிறுவப்பட்டு இயங்கிவருகிறது. இந்தக் குழுவுக்கு எழுத்து மூலமான மகஜர்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 31.10.74 ஆகும். 1959ம் ஆண்டு புதிய தேர்தல் தொகுதிகள் அமைக்கப்பட்டபோது, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் தமிழ்த் தொகுதிகளைப் பற்றிய விபரங்களை சரியான புள்ளி விபரங்களுடன் ஆராய்ந்து அப்போதைய தொகுதி நிர்ணயக் குழுவுக்கு அறிக்கை தந்து சாட்சியமளித்தவர் காலஞ்சென்ற அமரர் வன்னியசிங்கம் அவர்களாகும். நடமாடும் பல்கலைக்கழகம் என்று பெயர்பெற்ற அமரரின் ஆற்றல் கண்டு அன்று அவரைப் பாராட்டாதார் எவருமில்லை.

அதே போல—அன்று அமரர் வன்னியசிங்கம் செய்த அதே பொறுப்பை தமிழரசுக் கட்சியின் சார்பில் இன்று ஏற்றுக் கொண்டு—புதிய தேர்தல் தொகுதி ஆணைக்குழுவுக்கு புதிய தமிழ்த் தொகுதிகளை வகுப்பது பற்றி புள்ளி விபரங்களுடன் அறிக்கை தயாரித்துவருகிறார் சிம்மக்குரலோன் வவுனியா பா. உ. திரு. செல்லத்தம்பு. அமரர் வன்னியசிங்கத்துக்கு பின்னர், தமிழரசுக்கட்சியில் புள்ளி விபரங்களுடன் பிரச்சினைகளை விளக்கும் ஆற்றல் உள்ளவராக விளங்கும் திரு. செல்லத்தம்பு, காரியாதிகாரியாகவும் உதவி அரசாங்க அதிபராகவும் பணியாற்றிய காலத்தில் தமிழ் நிலத்தின் பிரச்சினைகளை நுணுகி ஆராய்ந்து வைத்திருப்பவர்.



அத்தகைய ஆற்றல் வீரர் செல்லத்தம்புவின் கவனத்துக்கு சுதந்திரன் வாசகர்கள் இருவர் தொகுதி நிர்ணயம் பற்றித் தந்திருக்கும் கருத்தினையும் இங்கு தருகிறேம். —ஆசிரியர்.

# கொழும்புவாழ் தமிழர்களுக்கும் பிரதிநிதித்துவம் வேண்டும்!

இப்பொழுது புதிய தேர்தல் தொகுதிகள் சம்பந்தமாக தமிழர் கூட்டணி மிகவும் அக்கறை காட்டி வருவது மிகவும் விரும்பத்தக்கதாகும். வட கிழக்கு மாகாணங்களை தவிர ஏனைய மாகாணங்களில் வசிக்கும் தமிழர்களினுடைய நலன் கருதி இம்முறை தேர்தல் ஆணைக் குழுவுக்கு தமிழர் கூட்டணி ஆலோசனை கூறவிருப்பது எல்லோரும் அறிந்ததே.

கொழும்பு மாநகர சபையை பொறுத்த வரையில் இதுவரை காலமும் ஒரு தமிழ் பிரதிநிதி அங்குள்ள எந்த தேர்தல் தொகுதியிலிருந்தும் தெரிவு செய்யப்படவில்லை. கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் தமிழர்கள் இரண்டாவது பெரும்பான்மை இனத்தவர்களாக வசிக்கிறார்கள். இவ்வாறிருந்தும் தங்களுக்கென ஒரு பிரதிநிதியை தெரிவு செய்யமுடியாமலிருக்கிறார்கள்.

இப்பொழுது கொழும்பு மாநகரசபையில் 4 தேர்தல் தொகுதிகள் உண்டு. அத்தொகுதிகளிலிருந்து 7 பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். இங்கு மாநகர சபைக்குள் 562160 மக்கள் 1971ம் ஆண்டு குடிசன விபரத்தின்படி வசிக்கிறார்கள். இவர்களின் விபரம் கீழ் வருமாறு.

| | |
|---|---|
| சிங்களவர் | — 284392 |
| இலங்: தமிழர் | — 103088 |
| இந்தி: தமிழர் | — 35011 |
| முஸ்லீம் | — 102730 |
| இந்தி: முஸ்லீம் | — 4996 |
| பறங்கியர் | — 10756 |
| மலேயர் | — 14509 |
| மற்றவர்கள் | — 6678 |

ஆகையினுல் இங்கு தமிழர்களின் மிகவும் கணிசமான தொகையில் வாழ்கிறார்கள். இரண்டு பிரதிநிதிகள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் இவ் எல்லைக்குளிருந்து மேலதிகமாக தெரிவு செய்யப்பட வேண்டும். அதாவது கொழும்பு மாநகர சபையிலிருந்து 9 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படக் கூடியதாக தேர்தல் தொகுதிகளை பிரிக்கவேண்டுமென்று தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவிடம் கூறவேண்டும்.

இப்பொழுது இருக்கும் 4 தேர்தல் தொகுதிகளை 3 தேர்தல் தொகுதிகளாக குறைக்க வேண்டும். அதே வேளையில் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலிருந்து 3 பிரதிநிதிகள் வீதம் தெரிவு செய்யப்பட வேண்டும். ஆகவே 3 தொகுதிகளிலிருந்து 9 பிரதிநிதிகள் தெரிவு செய்யக்கூடியதாகவிருக்கும்

தேர்தல் தொகுதிகளை (1) கொழும்பு வடக்கு (2) கொழும்பு மத்தி (3) கொழும்பு தெற்கு என பெயரிடலாம் இவ்வாறு கொழும்பை 3 தேர்தல் தொகுதிகளாக மாற்றுவதால் அங்கு சகல அரசியல் கட்சிகளும் போட்டியிட்டு வெல்லக்கூடிய ஒரு சாத்தியக்கூறு உருவாகும். அத்தோடு தலைநகரில் ஒன்று அல்லது இரண்டு தமிழ் அங்கத்தவர்கள் இல்லையே என்ற அவல நிலையும் நீங்கி விடும்.

கு. அழகரத்தினம்.
தும்பளை,
பருத்தித்துறை.

# கிளிநொச்சித் தொகுதியும் கிளிப்பிள்ளை வாதமும்

சமீபகாலத்தில் கிளிநொச்சித் தொகுதிக்கு ஒரு முக்கியத்துவம் வந்துவிட்டது. தபால் அமைச்சர் குமாரசூரியர் இத்தொகுதியில் போட்டியிடப்போகின்றுர் என்று அறிந்ததும் அவரது ஆதரவாளர்கள் அண்டப்புளுகுகளை அவிட்டுவிடத் தொடங்கி உள்ளனர். இது அண்டப்புளுகு மாத்திரம் அல்ல அப்பாவித்தனமானதும் ஆகும்.

அதில் ஒன்று குமாரசூரியர் இத்தொகுதியில் வெற்றியடையும் பட்சத்தில் யாழ்ப்பாணத்து வெங்காயம் ஆனையிறவுக்கு அப்பால் செல்வது தடைசெய்யப்படுமாம். கிளிநொச்சியிலும் அதற்கு அப்பாலும் விளைகின்ற வெங்காயமே ஆனையிறவுக்கு அப்பால் செல்லுமாம்! அப்போது கிளிநொச்சி வெங்காயத்துக்கு எக்கச்சக்கமான 'டிமான்ட்' ஏறுமாம்!!

ஐயகோ... கிளிநொச்சி வாழ் தமிழ் மக்களே ஆனையிறவு எங்கே இருக்கின்றது. கிளிநொச்சி எங்கே இருக்கின்றது. எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே...!

# வெற்றி எங்கள் கையிலே...!

அன்பு நண்பா,

சந்திகள், சாலைகள், விதிகள், வளவுகள் எங்கெங்கு நோக்கிடினும் அங்கெலாம் காக்கிச் சட்டைகள்—

பத்தடிக்கு ஒரு பொலிஸ்காரன் விதம் பொலிஸ் வேலி—

அவர்களின் கைகளிலோ பளபளக்கும் துப்பாக்கிகள்!

குண்டாந்தடியும், கேடயமும் இரும்புத்தொப்பியும் தாங்கிய பொலிசார் ஒரு புறம்—

சுழல் துப்பாக்கிகள்—இயந்திரத்துப்பாக்கிகள்—கைகளில் தாங்கியபடியே ஆங்காங்கே பொலிஸ் உயர் அதிகாரிகள்!

பயங்கர இரைச்சலுடனும் 'பேய்' வேகத்துடனும் விஞடிக்கொருதரம் 'ரோந்து' சுற்றித் திரியும் வயர்லெஸ் பொருத்தப்பட்ட பொலிஸ்கார்கள், டிறக்குகள், ஜீப்புக்கள்—

சாதாரண உடை அணிந்த பொலிசார்—இடையிடையே!

இவர்கள் மத்தியில் இரகசிய பொலிசார்—பெருந்தொகையாக!

ஆகாய விமானமொன்று அடிக்கொருதரம் மேலே வட்டமிட்டது!

அக்டோபர் நாலாம்நாள் யாழ்நகரில்நான்—கண்ட காட்சிகளே இவை! பல்லாயிரக்கணக்கான ஆயுதப்பொலிசாரால் முற்றுகையிடப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தைக் கண்ணுற்றபோது—தொடர்ச்சியான குண்டுமாரிகளுக்கு மத்தியில் 20ஆண்டுகளுக்கு மேலாகத் தனது விடுதலைக்கு போராடி வந்த வீரவியட்நாமும்—அடக்குமுறையை எதிர்த்து அணிதிரண்டு போராடிய அல்ஜீரியாவும் — பாகிஸ்தானின் கொடுமையை எதிர்த்து குமுறியெழுந்து போராடிய பங்களாதேஷுமே என் நினைவில் நிழலாடின!

மேற்சொன்ன நாடுகளாவது அடக்குமுறையையும், சர்வாதிகாரத்தையும் அடிமைத் தனத்தையும் எதிர்த்து ஆயுதமேந்திப் போராடின! தமிழ் ஈழமோ அந்த வழியை இன்னும் நாடிடவில்லை! அறவழியை—அகிம்சை நெறியைத்தான் இன்னும் தனது பாதையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது! இத்தகைய அகிம்சை வீரர்களை — அறவழிச்செல்வோரை—நிராயுதபாணிகளை அடக்கிட—அடித்திட—நொருக்கிட—தேவைப்படின் சுட்டுப்பொசுக்கிடத்தான் சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஆயுதப்படைகள் தமிழ் ஈழத்தில் குவிக்கப்பட்டிருந்தன—பல்லாயிரக்கணக்கில்!!

## அரசியல் மேடை

ஆம் நண்பா, எங்கள் உரிமைகளைப்பறித்து—எங்கள் உரிமைகளை மறுத்து — எங்கள் இளைஞர்களை இரண்டாண்டுகாலமாக சிறைக்குள் தள்ளி சித்திரவதை செய்து—எங்கள் மாணவர்களின் உயர் கல்வியை வெட்டிச்சாய்த்து—எங்கள் தமிழ்சமுதாயத்தைஅழித்தொழிக்கும் அநியாயச்செயல்களில் ஈடுபட்டிருக்கும் சிங்கள ஆட்சியின் தலைவியாரே—எங்கள் தமிழ் ஈழத்துக்கு நீ வராதே! வருவதானால் எங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை துடைத்துவிட்டு வா—அப்படியின்றி நீ இங்கு வருவாயானால் — நாம் பொங்கியெழுந்து எமது எதிர்ப்பை — அதிருப்தியை, விரக்தியை, வெறுப்பை பலமுனைகளிலும் காட்டியே தீருவோம்! உமது அரசின் அதிகாரமும் அடக்குமுறையும் ஆணவமும் ஆட்சித் திமிரும் எங்கள் உறுதிக்கு முன்னால்—விடுதலைக் கனலின் முன்னால்—வெறும் தூசு!" என்று முழங்கிய தமிழினத்தின் குரல், அநீதியின் மொத்த உருவமான சிங்கள ஆட்சியின் தலைவியாரின் இதயத்தில் வேலாகத்தைத்திருக்கவேண்டும்! அதனால் எழுந்த அச்சம்—திகைப்பு—பரிதவிப்பு—பதைபதைப்பு—இவற்றின் பிரதிபலிப்பே யாழ் நகரில் ஆயுதப்படை பல ஆயிரக்கணக்கில் குவிப்பு!!

நாடு முழுவதற்கும் நானேதான் இன்னும் பிரதமர் என்று சொல்லிக்கொள்ளும் சிறிமாவோ அம்மையார்—'மக்கள்' அரசின் தலைவியென்று தம்மை வேறு கூறிக்கொள்ளும் பிரதமர்—தனது கையாட்களுக்கும், கங்காணிகளுக்கும், எட்டப்பர்களுக்கும் எடுபிடிகளுக்கும் தமிழ் மக்களிடையே துளியும் செல்வாககில்லையென்பதைப் புரிந்துகொண்டு — தன்னுடைய பாதுகாப்பு படை முழுவதையும் யாழ்ப்பாணம் அனுப்பிவிட்டு—அந்தப்பாதுகாப்பு படைகளின் நிழலில்தான் யாழ் நகர் வரமுடிந்தது என்கிற உண்மை இன்றைக்கு வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது என்ருல் — அது தமிழ் சமுதாயத்தின் விடுதலை இயக்கத்துக்கு கிடைத்த ஒரு மாபெரும் வெற்றியாகும்! எழுச்சிதரக்கூடிய ஒரு சம்பவமாகும்!!

ஆம் நண்பா, ஆளவந்தார்களதும், அவர்களது ஏவல் நாய்களினதும் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள், இனியவார்த்தைகள், ஏளனங்கள் —எதற்குமே பலியாகாது—தமிழர் கூட்டணி ஆணையிட்டபடி சிங்களத்துப் பிரதமரின் யாழ் நகர் வருகையை முற்ருகப் பகிஷ்கரித்து—எதிர்ப்பியக்கத்துக்கு வெற்றிவாகை சூடித் தந்திட்ட என் தமிழ்க் குலத்தினரை நான் என்ன சொல்லிப் பாராட்டுவேன்!

எட்டப்பர்கள், இளிச்சவாயர்கள் —எடுபிடிகள், இனம்விற்றுப் பிழைப்போர், கங்காணிகள், பதவி, பட்டம், பணத்துக்காக பாதபூசை செய்திடுவோர்—தென்னிலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டோர்—தங்கள் இதயம் ஒப்புக்கொள்ளாவிடினும் உத்தியோகம் பறிபோய்விடக் கூடாதே என்பதற்காக வேண்டாவெறுப்புடன் வேறுவழியின்றி அரச உத்தியோகத்தர்கள் ஆசிரியர்கள், யாழ் மாநகரசபை ஊழியர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள்—இன்னேரன்ன சிலருமே அம்மையாருக்கு ஆலவட்டம் ஏந்தினரே தவிர—தமிழ்க் குருதி உடலில் ஓடும் தன்மானமுள்ள எந்த ஒரு தமிழனுமே திறந்த மனத்துடன் சிறிமாவை வரவேற்றிடவில்லை! மலர்ச்செண்டு வழங்கிடவுமில்லை!!

"பூட்டிய இரும்புக் கதவு திறந்தது—சிறுத்தையே வெளியே வா" என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கூறியதுபோல — தன்மானத் தமிழ்ச் சிறுத்தைகள்—வருங்காலத் தமிழ் ஈழத்தின் விடுதலைச் சிற்பிகள்—தமிழ் குலத்தின் வீரக்கொழுந்துகளாம் மாணவ மாணவியர்கள் 'தரப்படுத்தல்' திட்டத்தின் தலைவியின் வருகையை எதிர்த்து மூன்று நாட்கள்—அக்டோபர் 3, 4, 5ம் திகதிகளில்—தொடர்ச்சியாக பாடசாலைகளை பகிஷ்கரித்து வெளியேறி சிங்கள ஆட்சிக்கு செருப்படி கொடுத்திருக்கின்றனர் என்ருல்—மாணவ சமுதாயத்தின் விடுதலை ஆவேசத்தை என்னென்று புகழ்ந்திடுவேன்—என் தமிழில் வார்த்தை இல்லை! அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோரின் மிரட்டல்களையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு—அன்னைத் தமிழாளின் கண்ணீர் துடைத்திட அம்மையார் வருகையை எதிர்த்து கல்லூரிகளையும் பாடசாலைகளையும் பகிஷ்கரித்திட்ட என் உடன் பிறப்புக்களை—இளைய தலைமுறையினரை — இனத்தின் சார்பில் வாழ்த்துகிறேன்—போற்றுகிறேன்!!

மாணவ சமுதாயத்தைப் போலவே — விடுதலை இயக்கத்துக்கு எப்பொழுதும் பூரண ஆதரவுதந்துவருபவர்கள்வர்த்தகர்கள் ஆகும்! இதனால் அவர்கள் அடைகின்ற துன்பங்கள் அளப்பில என்ருலும்—அதையெல்லாம் மகிழ்வுடன் தாங்கிக்கொண்டு விடுதலை இயக்கத்துக்கு வேகம் சேர்த்து வருபவர்கள் நம்முடைய தமிழ் வர்த்தகர்கள்! பிரதமர் வருகையை எதிர்த்து 5ம், 6ம் நாட்களில் கடைகளைப் பூட்டி ஹர்த்தால் அனுட்டிக்க வேண்டுமென்று தமிழர் கூட்டணி வேண்டுகோள் விடுத்திட்டபோது—கடைகளைப் பூட்டினல் 'கோட்டாவை' வெட்டுவோம்; பர்மிட்டை பறித்திடுவோம்; என்று பகிரங்கமாக மிரட்டியது அரசு; பூட்டியிருக்கும் கடைகளை நாம் அடித்து நொருக்குவோம்—திறக்கவைப்போம் என்று மிரட்டினர்கள் சிங்கள ஏகாதிபத்தியத்தின் கங்காணிகள்!!

இத்தகைய அச்சுறுத்தல்கள்—மிரட்டல்களையெல்லாம் உதாசீனம் செய்துவிட்டு—எதுவந்தாலும் வரட்டும் என்ற துணிவுடன—கடைகளையும் உணவு விடுதிகளையும், தொழில் நிலையங்களையும் இரண்டு நாட்களாக பூரணமாக பூட்டி வைத்து குறிப்பாக கலகலப்புடன் காணப்படவேண்டிய யாழ் மாநகரின் கடைவீதிகளையெல்லாம் வெறிச்சோட வைத்து—ஹர்த்தாலை வெற்றிகரமாக்கிய வர்த்தகப் பெருமக்கள் என்றென்றும் தமிழ் சமுதாயத்தின் நன்றிக்குரியவர்கள்!

பாடசாலைகள் தொடர்ந்து மூன்று நாட்களாக 1,50,000 மாணவர்கள் பகிஷ்கரித்தனர்!

கடைகள், தொழில் நிலையங்கள், உணவு விடுதிகள் யாவும் இரண்டு நாட்கள் மூடப்பட்டன!

வாடகைக் கார்கள் ஓடவில்லை!

சந்தைகள் கூடவில்லை!

திரையரங்குகள் இருநாட்களாக மூடப்பட்டிருந்தன!

விதிகள் சந்திகள் அனைத்தும் மயான பூமிபோல வெறிச்சோடிக் கிடந்தன!

பேருந்து வண்டிகள்—மக்கள் பகிஷ்கரித்ததால் வெறும் வண்டிகளாகளாகத் திரிந்தன!

நண்பா, மேற்கண்ட நிலை யாழ் நகரத்தில் மட்டுமல்ல—யாழ் குடாநாடு முழுவதுமே பரவியிருந்தது—யாழ் குடா நாட்டின் முக்கிய நகரங்கள் அனைத்தும் இவ்வாறே காட்சியளித்தன. இவ்வளவு தூரம் தமிழ் மக்களின் எதிர்ப்புக்கும் வெறுப்புக்கும், அதிருப்திக்கும் மத்தியிலேதான்—பாதுகாப்பு படைகளின் துணையுடன்—எட்டப்பர்கள் அடிதொழுது வந்திட—சிறிமாவோ அம்மையார் யாழ் வந்து திரும்பியிருக்கிருர்!

பிரதமர் வருகையை எதிர்த்து அக்டோபர் 4ம் நாள் மாலை தமிழ் இளைஞர் பேரவையினர் நடத்திய மௌன ஊர்வலம்—வெறும் மௌன ஊர்வலம் மட்டுமல்ல—தமிழ் இளைஞர்களின் எஃகு உள்ளத்துக்கும் இரும்பு நெஞ்சத்துக்கும் இலட்சிய வீரத்துக்கும் எதையும் தங்கும் இதயத்துக்கும் தகுந்த எடுத்துக்காட்டுமாகும்!

'பிரதமர் வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திஞல் பொலிசார் ஒன்றும் செய்ய மாட்டார்கள் எங்கள் குண்டர்களைக்கொண்டு நாங்களே திருப்பி அடிப்போம்'—என்கிற திடீர் அமைச்சரின் 'சண்டித்தனம்' ஒரு புறம்; துரோகப்பரின் காடையர்கள் இடையில் புகுந்து தாக்கப்போகிருர்கள் என்கிற வதந்தி ஒரு புறம்; கும்பல் கும்பலாக ஆயிரக்கணக்கில் நீட்டிய துப்பாக்கிகளுடன் ஆவேச வெறிபிடித்து அலைந்து திரியும் பொலிசார் அடிப்பார்களோ, சுடுவார்களோ — தமிழ் இளைஞர்களின் இரத்தத்தை குடிப்பார்களோ என்கிற ஐயம் ஒரு புறம்—இத்தகைய பல்வேறு நெருக்கடிகளுக்கும் பரபரப்புக்கும் மத்தியில், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் முப்பெரும் படைகளை ஏந்தி எதுவந்தாலும் வரட்டும், எதையும் சந்திப்போம் இலட்சியத்திற்காக—எனும் துணிவுடன், யாழ் முனீஸ்வரர் ஆலயத்திலிருந்து சங்கிலி மன்னன் ஆண்டிருந்த நல்லூர் முத்திரைச் சந்தைவரை—யாழ் மாநகரத்தின் முக்கிய விதிகள் வழியேதமிழ் இளைஞர் பேரவைசெயலாளர்வரதராசா தலைமையில், 'நாம் யார்க்கும் குடியல்லோம்' எனும்சுலோகத்தை நெஞ்சிலேதாங்கியபடி கறுப்புத் துணிகளால் கைகளையும் வாயையும் கட்டி—தமிழினத்தின் அடிமை நிலையை எடுத்துக் காட்டியபடி—ஊர்வலமாக அணிவகுத்துவந்த நாலாயிரத்துக்கு மேற்பட்ட நம் தமிழ்க் காளையரின் தங்கத் தம்பிகளின் வீரத்தைக்கண்டபோது மெய்சிலிர்த்தது; இத்தகைய துணிச்சல் எம்இளைஞர்களிடம் இருக்கின்றதைக் கண்டபோது 'ஜெயமுண்டு பயமில்லை மனமே' என்று இதயம் கூத்தாடியது!

இந்த ஊர்வலத்தில்—விடுதலை உணர்ச்சியில் ஆண்களுக்கு பெண்கள் சளைத்தவரில்லையென்பதுபோல மாவீரன் சிவகுமாரனின் வீரத்தாயார் அன்னலட்சுமி அம்மையார் தலைமையில இளம் பெண்களும் மாணவியர்களும் வீரமங்கையர்களாக அணிவகுத்து வந்த காட்சி பேடியையும் வீரனுக்கும் காட்சியாகும்!

நண்பா, பகிஷ்கரிப்பு போராட்டத்தின் இறுதி நிகழ்ச்சி—அக்டோபர் 5ம் நாள் நடைபெற்ற பெண்களின் உண்ணாவிரதமாகும்! இந்த உண்ணாவிரதத்தை நடைபெருமல் தடுத்து நிறுத்துவதற்காக—நல்லூர் முருகனை சிங்கள அரசு 13½ மணிநேரம் "தடுப்புக் காவலில்" வைத்தும்கூட—திட்டமிட்டபடி இந்த

—6-ம் பக்கம் பார்க்க

# மலை சாய்ந்தது!

யாரும் எதிர்பார்த்திராத நேரத்தில்—எதிர்பாராத முறையில் — விழுந்த பயங்கரப் பேரிடியால் தமிழ் ஈழம் முழுவதும் தறிகெட்டுக் கதறியழுதுகொண்டிருக்கிறது.

'சோதனை மேல் சோதனை போதுமடா சாமி' என்று தமிழன்னை தலைவிரிகோலமாக அழுது அரற்றுகிறாள்!

ஆற்றுவாருமில்லை — தேற்றுவாருமில்லாத நிலையில் ஈழத் தமிழ் மக்கள் இதயம் சுக்கு நூறுகிட வேதனைக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

ஆம், பைந்தமிழ் ஈழத்தின் பத்தரை மாற்றுத் தங்கம் —விடுதலைப் படையின் அசையாத தளகர்த்தர்—கிழக்குத் தமிழகத்தின் கொள்கைப் பேரொளி—தலைவர் இராசமாணிக்கம் அவர்களின் திடீர் மறைவு எம்மை செயலிழக்கச் செய்து விட்டது!

மட்டக்களப்பு மாவட்டத்தின் மனம் நிறைந்த தலைவராக மட்டுமன்றி—தமிழ் ஈழம் முழுவதற்குமே தலைவராக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு—தமிழன் ஒவ்வொருவனதும் ஊனோடு ஊனாக—உயிரோடு உயிராக கலந்திருந்த இராசமாணிக்கம் அவர்களின் பிரிவுச்செய்திகேட்டு ஒவ்வொரு தமிழ் இதயமும் துடித்துக்கொண்டிருக்கிறது.

தலைவர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் எந்த ஒரு கட்டத்திலும் பட்டம் பதவிக்காகவும் பசுமையான வாழ்வுக்காகவும் இலட்சியத்தைப் பேரம் பேசியவருமல்ல— இலட்சியத்திலிருந்து வழுவி ஓட நினைத்தவருமல்ல— மாறாக இலட்சியங்களுக்காக தன்னுடைய வசதிவாய்ப்புக்களையெல்லாம் இழந்த நிலையிலும்—கொள்கைக்கோமானாக கிழக்கிலங்கையின் பட்டை தீட்டிய வைரமாக— இறுதி வரை ஜொலித்துக்கொண்டிருந்தவர்.

இந்நாட்டுச் சிங்களக் கட்சிகள் அனைத்தினதும் அடிப்படை இலட்சியம் தமிழ் சமுதாயத்தை அழித்தொழிப்பது தான் என்பதை என்று அவர் புரிந்துகொண்டாரோ—அன்றிலிருந்து—அதாவது 1956ம் ஆண்டு 'சிங்களம் மட்டும்' என்ற வெறித்தனமான கொள்கையை சிங்களக் கட்சிகள் ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து — தாம் சார்ந்திருந்த ஐ. தே. கட்சியை விட்டு வெளியேறி தந்தை செல்வாவின் தலைமையை ஏற்று தமிழரசுக்கட்சியுடன் தம்மையும் ஒருவராக இணைத்துக்கொண்ட திரு. இராசமாணிக்கம், கட்சியின் தலைவராக மூன்று தடவைகள் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறாரென்றால் — அதிலிருந்து அவரது தூய்மையான தொண்டையும், தியாகத்தையும் இலட்சிய ஆண்மையையும் அந்தரங்க சுத்தியையும் தெற்றெனப் புரிந்துகொள்ள முடியும்!

தமிழரசுக்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்று — தமிழினத்தை விடுதலைப்பாதையில் அவர் கொண்டு செலுத்திய காலங்களில் அவர் காட்டிய நிதானமும், அமைதியும், பொறுப்புணர்வும் வியக்கத் தக்கன. அவர் கட்சியை வழி நடத்திய 1961ம் ஆண்டு கால கட்டத்திலேதான், தமிழ் ஈழம் முழுவதும் இரண்டு திங்களுக்கு சிங்கள ஆட்சியையே ஸ்தம்பிக்க வைத்த மாபெரும் அறப்போர் நடந்தது என்பதும் வரலாறு குறித்து வைத்திருக்கும் உண்மையாகும்!

கிழக்கு, வடக்கு, மன்னார், மலைநாடு, வவுனியா என்று பிரதேசப் பிரிவினைபேசி பிளவுபட்டு நின்ற தமிழர்களை ஒற்றுமைப் படுத்தி ஒரே தேசிய இனமாக கட்டியெழுப்புவதற்கு தன் இறுதி மூச்சுவரை பாடுபட்ட அவர் — தோல்விகளைக்கொண்டு ஒருபோதும் துவண்டுபோனதில்லை. இனவிடுதலைப்போராட்டங்களில் ஈடுபட்டு பலதடவைகளில் அவர் சிறைசென்றபோதிலும்—சிறையின் கொடுமையும் துன்பமும் அவர் சிந்தையை மாற்றியதில்லை!

தமிழினத்தின் விடுதலை வாழ்வையே தன் இறுதி மூச்சாகக்கொண்டு ஓயாமல் பணியாற்றிய இத்தகைய மாணிக்கமலை இன்று சாய்ந்துவிட்டது! கிழக்குத் தமிழகத்தின் தவப்புதல்வன் வீழ்ந்துவிட்டான்! தமிழர் விடுதலைப் படையின் தளகர்த்தர்களில் ஒருவரை காலன் நம்மிடமிருந்து பறித்தெடுத்து விட்டான்!

இனியும் இதை நினைத்து நினைத்துக் கண்ணீர் விட்டும் கதறியழுதும் பயனில்லை! தலைவர் இராசமாணிக்கம் அவர்களின் பூதவுடல் மறைந்தாலும், அவரது உயிர் மூச்சு— தமிழ் ஈழ விடுதலை எனும் இலட்சிய வடிவில் நம்மிடையே இருக்கிறது!

ஆம்—கடந்த 1973ம் ஆண்டு நடைபெற்ற— தமிழரசுக் கட்சியின் இலட்சிய வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய கட்சியின் 12வது மாநில மாநாட்டில்—மிகமுக்கியமான அரசியல் தீர்மானமான ''தன்னாட்சித் தமிழ் ஈழம்'' எனும் தீர்மானத்தை ஆதரித்து வழிமொழிந்து தலைவர் இராசமாணிக்கம் ஆற்றிய வீரஉரை இன்னும் நம் செவிகளில் ரீங்காரமிடுகிறது!

மறைந்த தலைவர் — காண ஆசைப்பட்ட — தன்னாட்சித் தமிழ்ஈழத்தை உருவாக்குவதே தலைவரின் ஆத்ம சாந்திக்கு நாம் செய்யக்கூடிய கைமாறாகும்! அர்ப்பணியில் நம்மை நாம் மேலும் தீவிரமாக ஈடுபடுத்திக்கொள்ள மறைந்த தலைவரின் ஆத்மா மீது ஆணையிட்டு உறுதியேற்போமாக!

வாழ்க இராசமாணிக்கத்தின் நாமம்!!

வருக தன்னாட்சித் தமிழ் ஈழம்!

# தமிழ்த் தேசிய உணர்வின் மொத்தவடிவம் தலைவர் இராசமாணிக்கம்!

'இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தின் தெற்கு முனையாகிய மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து நான் வந்திருக்கிறேன். அப்பகுதியில் அரசாங்கம் திட்டமிட்டு நடாத்தும் குடியேற்றத்தினால் நமது நாடு நாளுக்கு நாள் பறிபோகிறது. தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியமான பிரதேசத்தில் சிங்களப் பிரதிநிதி தெரிவு செய்யப்படக்கூடிய ஒரு தனித் தொகுதியே இன்று உருவாக்கப்பட்டுள்ளது.

"எனவே யாழ்ப்பாணத்திலுள்ள உங்களிலும் பார்க்க சிங்களத் தாக்குதலின் வேகத்தை நன்கறிந்தவன் நான். எமது ஆற்றலுக்கு இயன்றவரை மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த நாங்கள் இத்தாக்குதலை எதிர்த்து வந்திருக்கிறோம். ஆண்டவன் அருளோடு வருங்காலத்திலும் எதிர்த்து வெற்றிபெறுவோம் என்று நம்புகிறேன்.

"இனத்தின் விடுதலை இயக்கத்தில் மட்டக்களப்பு மக்கள் கொண்ட பங்கை மதித்தே என்னை உங்கள் தலைவராகத் தெரிவு செய்து கௌரவித்திருக்கிறீர்கள் என்று நம்புகிறன். அன்றியும் இலங்கை வாழ் தமிழ் பேசும் தேசிய இனத்தின் பிரிக்கமுடியாத ஒற்றுமையின் எடுத்துக்காட்டாகவும் இத்தெரிவு விளங்குகிறது. தேசிய இனம் என்ற சொல்லை நான் வேண்டுமென்றே உபயோகித்தேன். ஏனெனில் எவ்வகையிலாகப் பார்த்தாலும் நாம் ஒரு தேசிய இனம் என்பதற்கு ஐயமில்லை. நாம் ஒரு திட்டவட்டமான எல்லையுள்ள பிரதேசத்தைத் தாயகமாகக் கொண்டிருக்கிறோம். ஒரு பொது மொழியைப் பேசுகிறோம்; கல்தோன்றி மண்தோன்றாக் காலம் தொட்டு வளர்ந்து வந்த ஒரு தனிப் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் எமது சொந்தமாகக் கொண்டிருக்கிறோம். இவை எல்லா வற்றிற்கும் மேலாக ஒரு தேசிய இனத்திற்கு இன்றியமையாத நாம் ஒன்றென்றென்றும் உணர்ச்சியை தமிழ் பேசும் மக்களாகிய நாமெல்லோரும் பெற்றிருக்கிறோம். இந்நாட்டின் எப்பாகத்தில் வாழ்ந்தாலும் என்னையும் உங்களையும் எங்கள் எல்லோரையும் ஒன்றாகப் பிணைப்பது இவ்வுணர்ச்சியேயாகும்."

—மேற்குறித்த முறையில் மட்டக்களப்பின் மாண்பினையும், கிழக்கு மாகாணம் எவ்விதம் திட்டமிட்டபடி சிங்களக் குடியேற்றத்தினால் பறிக்கப்பட்டு வருகிறதென்பதையும், தேசீய இனம் என்றால் என்ன, அதன் வரையறையென்ன ஏன் இலங்கை வாழ் தமிழ் இனம் ஒரு தேசீய இனமாகக் கணிக்கப்படவேண்டும். இன்று எம் இனத்தைச் சூழ்ந்துள்ள பேரின்னல்கள் என்ன, எவ்விதம் எம் இனத்திற்கு விடிவை — மீட்சியை ஏற்படுத்த முடியுமென்றெல்லாம் ஆணித்தரமான கருத்துக்களை யாழ்ப்பாணத்தில் 1961ல் நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சியின் ஏழாவது மாநாட்டில் தலைமை தாங்கி வழங்கிய பெருமகன் யார்? இத்தகைய உள்ளம் உருக்கும் சொற்களை யார் எடுத்துரைத்திருக்க முடியும்? அவர் வேறு யாருமல்ல—எம் இதயத்தில் தனியிடம் பெற்ற இராசமாணிக்கம் அவர்களேயாகும். அவர் இன்று எம்மிடையே இல்லை என்று எண்ணுகின்றபோது ஏற்படுகின்ற ஏக்கத்திற்கோ எல்லையில்லை.

கிழக்கில் பிறந்த ஒளி
கீர்த்தியுடன் வாழ்ந்த ஒளி
முழங்கித் தமிழ் ஒன்றே
மூச்சாய் கிடந்த ஒளி
தடைகள் பல கண்டும்
தலை நிமிர்ந்து நின்ற ஒளி
அடங்கிற்றே ஐயோ
அன்னைத் தமிழ் தாயே
புறம்காணு உன் புதல்வன்
போய்விட்டான் என்றாலும்
அறம் வாழும் மட்டும்
அவர் பெயரும் வாழும்
அம்மா.

—எ. அற்புதராசா குரூஸ்.

நெருக்கடிகள் பல சூழ என்ன செய்வது என்று தெரியாது தத்தளிக்கும் இவ்வேளையில் எம் இயக்கத்தின் மூத்த தலைவர் ஒருவர் எளிமையும் தன் அடக்கமும் ஆழ்ந்த சிந்தனை வளமும் கட்சியின் கட்டுக்கோப்பு வளர்ச்சியிலே பெரும் நாட்டமுமுடைய ஒரு பொறுப்புள்ள தலைவர் எம்மைவிட்டுச் சடுதியாகப் பிரிந்தது எமக்கு ஒரு பேரிடியாக அமைந்துள்ளது.

எமது பொது எதிரியில் இருந்து எம்மை விடுவிக்க எம் அடிமைத் தளையை அறுத்தெறிய நாம் போர்க்குரல் எழுப்பிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் எம்மினத்திடையே துரோகிகளின் எண்ணிக்கை பெருகிக்கொண்டிருக்கிறது இத்தகைய சூழ்நிலையில் எம்மை வழிநடதத வேண்டிய தூய தலைவர்கள் ஒன்றன்பின் ஒன்றாக மறைந்து கொண்டிருக்கிறார்களே என்றுஎண்ணுகையில் கண்களில் நீர் பெருகுகிறது. 'நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்ல அல்ல' என்று கூறப்படினும் எம்மை இறைவன் எல்லை மீறிச் சோதிக்கிறான் என்றே எண்ண இடம் தருகிறது.

பிற இனக் குடியேற்றத்தால் பெருமளவு தாக்கப்படாத ஒரேயொரு தனித் தமிழ்த் தொகுதி என்ற பெயருடன் கிழக்கு மாகாணத்தில் விளங்கும் ஒரேயொரு தொகுதி பட்டிருப்புத் தொகுதியாகும். பட்டிருப்புத் தொகுதி பைந்தமிழரிடம் இருந்து பறிபோகாது பாதுகாக்க இராசமாணிக்கம் ஆற்றிய பணி என்றும் நன்றியுணர்வோடு தமிழ் மக்களால் போற்ற வேண்டிய பணியாகும்.

தமிழ் நிலத்தின் வாழ்விற்தான் தமிழ் இனத்தின் வாழ்வு தங்கியிருக்கிறது என்று அடிக்கடி கூறி தமிழ் நிலத்தின் எல்லைப் பாதுகாப்பிலே அவர் காட்டிய அக்கறையை எம்மவர் எளிதில் மறக்க முடியாது. இனியார் திட்டமிட்டு நடத்தப்படும் சிங்களக் குடியேற்றத்தை தடுத்துநிறுத்தப் போகிறார்கள் என்று எண்ணும்போது எம் நெஞ்சம் வேதனையால் வெம்முகிறது. இலங்கையின் 1971ன் குடித்தொகைக் கணக்கு கிழக்கு மாகாணத் தமிழருக்கு ஏற்பட்டுள்ள அச்சம்தரும் நிலையை ஆழமாக உணர்த்தி நிற்கிறது.

எம் நாடாளுமன்றத்தில் மிக்க பொறுப்புணர்ச்சியுடன் பொருள் பொதிந்த கருத்துக்களை வழங்கியவர் எம். இராசமாணிக்கம் அவர்கள். அவை அனைத்தும் தமிழ் இனத்தின் நிலைத்த நல்வாழ்வில் அவருக்கிருந்த நாட்டத்தையும் அவரின் அரசியல் தூரநோக்கினையும் அழகுற எடுத்துக் காட்டுகின்றன. இவை அனைத்திற்கும் மேலாக எந்நிலையிலும் கட்சியின் கட்டுக்கோப்பைப் பேணிக்காத்த தலைவராக அவர் விளங்கியதும் இங்கு வலியுறுத்தற்குரியது.

ஒரு இனத்தை வழி நடாத்த வேண்டிய தலைவனுக்கு இருக்கவேண்டிய பண்புகள் அனைத்தும் அவரிடம் குடிகொண்டிருந்தன. அவர் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பல் எளிதல்ல.

ஈழவேந்தன்

## நல்லூர்க் கந்தனுக்கு..

—1-ம் பக்கத் தொடர்

மிட்டபடி பிரதமரின் கண் எதிரிலேயே உண்ணாவிரதப் போராட்டத்திலீடுபட்டிருந்தனர்.

அறப்போரில் ஈடுபட்டிருந்த தமிழ்த் தாய்மார்களை மீண்டும் காண உள்ளம் உறுத்தியதாலோ என்னவோ — சிறிமாவோ அம்மையார் வேறுவழியாக ஓட்டம் பிடித்தார்!

## இறக்குமதி!

தெற்கிலிருந்து வடக்கே சென்று இறங்கிய சிங்களப் பிரதமரை அங்கு வைத்து வரவேற்க தென்னிலங்கையிலிருந்தே ஆட்களையும் இறக்குமதி செய்ய நேரிட்டது. 150 பஸ்கள், தனியார் லொறிகள், கூட்டுறவுச்சங்க லொறிகள் ஆகியவற்றில் ஆட்கள் தெற்கிலிருந்து வடக்கே கொண்டு செல்லப்பட்டதுடன், மூன்று விசேட ரயில்களும் இதற்காக விடப்பட்டனவாம். ஓசியில் சாப்பாடும் யாழ்ப்பாணம் இலவசமாக சென்றுவர வாய்ப்பும் கிடைத்தால் யார்தான் அதை இழப்பார்கள்?

## இயற்கை எதிர்த்தது

பிரதமர் பலாலி விமான நிலையத்தில் 5ந் திகதி காலை 8-45 மணிக்கு இறங்குவதற்கு திட்டமிட்டிருந்தும், காலை 9-30 மணிக்குத்தான் விமானம் கீழே இறங்க முடிந்தது. இதற்குக் காரணம் கடுமையாக கொட்டியபேய் மழையாகும். தமிழ் மக்களுக்கு அநீதி இழைத்து வரும் ஆட்சியின் தலைவியை தமிழ்ப் பூமியில் முக்கால் மணி நேரத்துக்கு கால் வைக்க முடியாது தடுத்து நிறுத்தியதன் மூலம் இயற்கையும் அம்மையாரின் விஜயத்துக்கு தனது பலமான எதிர்ப்பைக்காட்டிவிட்டது.

## சூரியர் முகத்தில் அசடு!

பலாலி விமான நிலையத்தில்—மழையைக் கண்டதும் அம்மையாருக்கு ஒரு புதிய கற்பனை உருவாகியிருக்க வேண்டும். அம்மையார் விமானநிலையத்தில் பேசும் நிகழ்ச்சி ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சி நிரலில் இடம்பெறாத போதிலும், தான் பேசவேண்டுமென்றுதிடீரென்று முடிவு செய்துஅம்மையார்பேசினார் தான் வரும்போதே மழையைக்கொண்டு வந்துவிட்டதாக அம்மையார் சிங்களத்தில்பேசிய போது அதை யாரும் சுவைத்து கைதட்டி வரவேற்கவில்லை. இதைக் கண்ட 'அடிமை' குழு சூரியருக்கு பொறுக்கவில்லைப் போலும்! உடனே இருக்-

—5-ம் பக்கம் பார்க்க

# சிறிமாவின் காதுகளை செவிடுபடச் செய்த உணர்ச்சிக் கவிஞரின் எழுச்சிப் பாடல்கள்!

—1-ம் பக்கத் தொடர்

கையைவிட்டெழுந்து சன்னதம் பிடித்தவர்போல தனது இருகைகளையும் தட்டி "எல்லோரும் கைதட்டுங்கள்" என்று கூறிக்கொண்டு தனது கையைத் தட்டினாராம்! அவரது இரண்டு கைகளைத் தவிர வேறுகைகள் தட்டப் படவேயில்லை. சூரியர் முகத்தில் அசடு வழிந்திட கோமாளிபோல காட்சியளித்தார்.

## ஆசிரியர்கள் கணக்கெடுப்பு

பலாலியிலிருந்து அம்மையார் பவனிவரும்போது—வீதியின் இருபக்கமும் மக்கள் இன்றி வெறிச்சோடிக் கிடந்தது. ஆங்காங்கே கட்டாயத்தின் பேரில் வந்து சேர்ந்த ஆசிரியர்களும் கூட்டுறவு சங்க ஊழியர்களுமே காணப்பட்டனர். ஏற்கெனவே பிரதமரை வரவேற்பதற்கு வருவதாக கையெழுத்துப்போட்டுக் கொடுத்திருந்த ஆசிரியர்கள் அனைவரும் தவறாது பிரசன்னமாகியிருக்கிறார்களா என்பதை ஒவ்வொருசந்தியிலும் நின்று கணக்கெடுத்துச் சென்றார் ஓர் கல்விஅதிகாரி.

இந்து மகளிர் கல்லூரி அதிபர் பிரதமரை வரவேற்று தமிழில் எழுதப்பட்ட ஒரு 'பானர்' தயாராக வைத்திருந்தார். அதை கந்தர்மடம் சந்தியில் கட்டவிருந்த சமயம், சிவானந்தம் என்ற ஓர் தமிழ்த்துரோகி, அதைக் கட்டவிடாது — தனிச் சிங்களத்தில் எழுதப்பட்ட 'பானர்' ஒன்றை கந்தர் மடம் சந்தியில் கட்டி தனது அடிமைத்தனத்தைக் காட்டிக்கொண்டது. அதைக் கண்டவர்கள் அனைவரும் காறியுமிழ்ந்தனர்.

## இந்தியன் எக்ஸ்பிரஸ்

பலாலி விமான நிலையத்திலிருந்து, ஆயுதப் பொலிசார் புடைசூழ, கண்ணாடிகள் அனைத்தும் மூடப்பட்ட காரில் அம்மையார் ஒரு "கைதி"போலச் சென்ற காட்சி கண்றாவியாக இருந்தது.

பிரதமரின் இந்த ஊர் வலம் பற்றி அரசாங்க ஊதுகுழல்களான ஈழத்துப் பத்திரிகைகள் பெரிதாக புகழ்ந்தள்ளபோதிலும் 6—10—74 இந்தியன் எக்ஸ்பிரஸ் பின்வருமாறு உண்மையை படம் பிடித்துக்காட்டியிருக்கிறது.

Prime Minister, Sirimavo-Bandaranayake flew into Jaffna today amidst unprecedented security precautions on her first visit to the Tamil Speking Northern Province of the Island.

At junctions and bazzars areas along the route from Palaly airport to the town, there were some crowds to greet her, but the decorated ten mile stretch was mostly deserted, with Tamil Speaking people keeping in doors, reliable reports reaching here said.

"பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயகா இதற்கு முன் எப்போதுமே இல்லாத அளவு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் தமிழ் மொழி பேசப்படுகின்ற (இலங்கையின்)வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணத்துக்கு தனது முதல் விஜயத்தை மேற்கொண்டார். பலாலிவிமான நிலையத்திலிருந்து நகர் வரைக்குமிடையிலான சந்திகளிலும் கடைத்தெருக்களிலும் ஒரு சில மக்கள் வரவேற்பதற்கு நின்றாராயினும் தமிழ் மக்கள் அனைவரும் வீடுகளைப்பூட்டி உள்ளே இருந்ததனால் அலங்கரிக்கப்பட்ட இந்தப் பத்து மைல் தூரமும் அனேகமாகவெறிச்சோடி பாலைவனம் போலக் காட்சியளித்ததாக எமக்கு நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன!"

## நல்லூரில் முள் வேலி!

நல்லூர் கந்தசாமி கோவிலில் சனிக்கிழமை காலை 10-15க்கு பிரதமர் வழிபாடு செய்யவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் 'மக்கள்' பிரதமர் கோவிலில் வழிபாடு செய்யும் நேரத்தில், மக்கள் கோவிலுக்குள் செல்லக்கூடாதென்று கருதிய பொலிசார், நல்லூர் கோவில்பகுதியை முதல் நாள் (4-10-74) அன்று இரவு 12 மணிக்கே பொது மக்கள் பிரவேசிக்க முடியாதபடி முள்வேலி போட்டு தடுக்கப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி விட்டனர். சைவ பக்தர்கள் முருகனிடம் சென்று வழிபடும் அடிப்படை உரிமை பறிக்கப்பட்டது. சிறிமாவுக்காக சிவநெறியில் நின்று அன்றாடம் முருகனை வழிபடும் அடியார்களின் வழிபடும் உரிமை மறுக்கப்பட்டது. முருகன் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு, அடியார்கள் அவனிடமிருந்து பிரிக்கப்பட்டார்கள்.

## மக்கள் அவதி

ஆலயப்பகுதியை ஆக்கிரமித்துக்கொண்ட பொலிசார், ஆலயப்பகுதியிலுள்ள வீடுகளில் இருக்கும் மக்களிடம், பிரதமர் வந்து திரும்பும் மட்டும் வீட்டுக்கேற்றுக்களை திறக்கக்கூடாதென்றும் உத்தரவிட்டிருந்தனர். 5ந் திகதி காலை வெளியூர்களிலிருந்து திரும்பிய நல்லூர் ஆலயப்பகுதி வீடுகளில் குடியிருக்கும் மக்கள் பலர் தங்கள் இல்லங்களுக்கு செல்லமுடியாதவாறு பொலிசாரால் தடுக்கப்பட்டு நடுத்தெருவில் நின்று பரிதவித்தனர்.

வழமைபோல நல்லூர் முருகன் ஆலயத்தில் கார்த்திகை தரிசனத்துக்காகவும், நல்லூர் சிவன் கோவிலில் புரட்டாதிச் சனிக்கு எள் எண்ணெய் எரித்து வணங்குதற்கும் 5ம் திகதி காலை நூற்றுக்கணக்காகச் சென்ற பெண்கள் கோயில்கள் 'சீல்' வைக்கப்பட்டிருப்பதாக பொலிசாரினால் தெரிவிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டனர். அப்படி திருப்பியனுப்பப்பட்ட பெண்கள் அம்மையாரைத் திட்டிக்கொண்டு அங்கிருந்துசென்றதைக் காணக்கூடியதாயிருந்தது.

நல்லூர்கோவில் முகாமையாளரேகூட ஒரு கட்டத்தில் கோவிலுக்குள் செல்லக்கூடாதென்று பொலிசாரால் தடுக்கப்பட்டதாகவும், இதேபோல பிரதமரை வரவேற்கவென நயினாதீவிலிருந்து நல்லூருக்குவந்திருந்த இந்துமதக் குரு ஒருவரும் பொலிசாரின் தொல்லைக்குட்படுத்தப்பட்டதாகவும் தெரிகிறது.

## உண்ணாவிரதம்

நல்லூர் வீதிகளிலும், வீதியோரங்களிலுள்ள வளவுகளுக்குள்ளும் இருந்து துப்பாக்கி ஏந்திய பொலிசாரும் சி. ஐ. டி. யினரும் காவல் புரிந்தனர்! 5ம் திகதி காலை திட்டமிட்டபடி நல்லூர் ஆலயமண்டபத்தில் உண்ணாவிரதம் மேற்கொள்வதற்காக தியாகி சிவகுமாரனின் தாயார் திருமதி அன்னலட்சுமி அம்மையார், திருமதி மங்கையர்கரசி அமிர்தலிங்கம், திருமதி இராசபூபதி அருணசலம் ஆகியோர் தலைமையில் நூற்றுக்குமேற்பட்ட தமிழ்ப் பெண்கள் கைகளில் தேங்காய், கர்ப்பூரம், அர்ச்சனைத் தட்டுக்களுடன் அரசடி சந்தி வழியாக நல்லூருக்கு செல்ல முயன்றபோது அரசடிச் சந்தியில்வைத்து ஆயுதம் தாங்கிய பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இவ்வாறு தடுத்து நிறுத்தப்பட்டவுடன் அவர்கள் அரசடி சந்தியிலுள்ள வைரவர் கோவிலின் முன்னால் தேங்காய் அடித்து கற்பூரம் கொழுத்தி வணங்கிவிட்டு அங்கிருந்துபின்னேக்கிவந்து அருகேயுள்ள வீரமாகாளி அம்மன் கோவில் ஆலய முன்றலில் —சிறிமா அம்மையார் வருவதற்கிருந்தபாதையின் எதிர்ப்புறம்—உண்ணாவிரதம் இருக்கவாரம்பித்தனர். இதைச் சற்றும் எதிர்பாராத பொலிசார் என்ன செய்வதென்று தெரியாது கைபிசைந்து நின்றனர்.

பெண் பொலிசார் வரவிருக்கிறார்கள் — உண்ணாவிரதிகளைத்தூக்கி அப்புறப்படுத்தப்போகிறார்கள் —கலவரம் ஏதும் உருவாகலாம் என்ற வதந்திகள் அடிபட்டபோதிலும், அதையெல்லாம் பொருட்படுத்தாது வருவது வரட்டும், தமிழினத்திற்காக எதையும் தாங்குவோம் எனும் உறுதியுடன் வீரமாகாளியம்மனை வேண்டுதல் செய்யும் பாடல்களையும், உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் பாடல்களையும் பாடியபடி வீரத் தமிழ்த் தாய்க்குலம் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்தது

சிறீலங்கா சுதந்திரக்கட்சியென்றும் கூலிக்குமாரடிக்கும் சில கழுதைகள், உண்ணாவிரதமிருக்கும் தாய்மாரின் பாடலுக்கு போட்டியாக எதிரே ஒரு ஒலிபெருக்கியை பூட்டி ஆபாச சினிமாப் பாடல்களைவேண்டுமென்றே அலறவைத்தனராயினும், பொதுமக்கள் காட்டிய எதிர்ப்பால், சில நிமிடங்களில் வாலைச்சுருட்டிக் கொண்டனர்.

சரியாக காலை பதினொன்றரை மணிக்கு வீரமாகாளி அம்மன் கோவில் வழியாக நல்லூர், கந்தசாமி கோவில் நோக்கி பிரதமரின் கண்ணாடி மூடப்பட்ட கார் முன்னும் பின்னும் பொலிஸ் ஜீப்புகளும், டிறக்குகளும் தொடர — பத்தடிக்கு ஒரு பொலிஸ்காரன் வீதியின் இருமருங்கும் காவல்காக்க வந்தது. பிரதமரின் காரைக் கண்டதும்,விடுதலைஉணர்ச்சி கொந்தளிக்கும் குரலில், "பட்டினி கிடந்து பசியால் மெலிந்து" என்று தொடங்கும் (கவிஞர் காசி ஆனந்தனின்) பாடலை வேகத்துடன் உண்ணாவிரதமிருந்த தமிழ் பெண்கள் பாடிய போது, எதிர்பாராத இக்காட்சியை கண்ணாடிக்கூடாக முகத்தைத் திருப்பி ஒரு கணம் பார்த்த பிரதமர், சடாரெனதிரும்பிக்கொண்டார்.

இந்தக் காட்சியை—நெஞ்சுருக்கும் காட்சியை—வெய்யிலில் வாடிவதங்கியபடி நீதிகோரி தவமிருந்த கண்ணகிகளை—மீண்டும் பார்க்க அஞ்சியோ — குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்ததாலோ —அதே பாதையால் மீண்டும் திரும்பி வர விருந்த பிரதமர் 'றூட்'டை மாற்றிக்கொண்டு வேறுபாதையால் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிச்சென்றார்.

நல்லூர் ஆலயத்தில் பிரதமருக்கு காளாஞ்சியை கோவில் முகாமையாளரே வழங்கவேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்ற அவர் மறுத்துவிட்டார் என்று தெரிகிறது.

மக்களைத் துரத்திவிட்டு—மக்கள் பிரதமர் நல்லூர் வந்து சென்ற பின்னர்—அதாவது 13½ மணிநேரம் தடை விதிக்கப்பட்ட பின்னர் — 5-10-74 பகல் 1-30 மணிக்கே தடை நீக்கப்பட்டது!

## யாழ்ப்பாண நகர......

—1ம் பக்கத் தொடர்

முனீஸ்வரர் ஆலய முன்றலில் ஆரம்பமான இவ்வூர் வலத்திற்கு திரு. அ. வரதராசன் தலைமை தாங்கினார்.

தமிழுரிமைப் போரில் ஆண்களுக்கு தோள்கொடுத்துக் களத்தில் இறங்கிட தமிழ் பெண்களும் தயார் என்பது போல— இவ்வூர் வலத்தில் சிவகுமாரனின் தாயார் திருமதி அன்னலட்சுமி தலைமையில், பள்ளி மாணவிகளும் பருவ மங்கையரும், மூதாட்டிகளும் சின்னஞ் சிறுமிகளுமாக ஐநூற்றுக்கு மேற்பட்ட பெண்களும் கலந்துகொண்டனர்.

கட்டுப்பாட்டுடன் நடந்த இந்த மூன்றுமைல் ஊர் வலத்தைக் கண்டு பொலீஸ் உயர் அதிகாரி ஒருவரே சாவகச்சேரி பா. உ. விடம் பாராட்டினார். ஊர்வலம் நல்லூர் கந்தசாமி கோவிலடியை அடைந்தபோது ஆகாய விமானமொன்று அப்பகுதியை மூன்று முறை வட்டமிட்டு பறந்தது. ஊர்வலம் முத்திரைச் சந்தை மைதானத்தையடைந்த பின்னர், பிரதமர் வருகையை எதிர்த்து கூட்டம் நடைபெற்றது.

ஊர்வலத்தில் இளைஞர்களுக்கு கண்காணிப்பாக சட்டத்தரணிகள் அ. குமரகுரு, யோகீஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## கடையடைப்பும்...

—6-ம் பக்கத் தொடர்

தொழிலாளர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர் யாழ்நகர் சிங்கள குடிகள் இன்னும் எச்சசொச்சத்து கடமையிலிராத தென்னிலங்கை பொலிசார் இப்படி சேர்க்கப்பட்ட கூட்டம் 2,000 தேறவில்லையாம்.நகர வரவேற்புக்கு இவர்களோடு அரசாங்க உயர் உத்தியோகத்தர்களையும் சேர்த்து கொள்ளவேண்டும். நகர முன்றலில் கூட்டம் நிறையு முன்பே படலைகள் பூட்டப்பட்டன. கூட்டம் நிறைந்து வழிவதாக போக்கு காட்ட மேற்படி பொலிசாரின்கெடுபிடிகளால்மாநகர ஆணையாளர், கணக்காளர் இன்னும் பல உயர் உத்தியோகத்தர்கள் மிகவும் கஷ்டப் பட நேர்ந்தது.

## சிங்களமே வாழ்கிறது...

—7-ம் பக்கத் தொடர்

வில்லை'யென்பதைவிசாரணை வைத்து நிரூபிக்கும்படி, பலர் பரீட்சைப் பகுதியை கேட்டும் பலனில்லை.

இத்தகைய அநீதிகளின் பிறப்பிடமாகக் கொண்ட இலங்கை அரசாங்கத்திற்குத்தான் வட்டு. எம்பி. போன்றோர், ஒத்தாசை புரிகிறார்கள். அத்தோடமையாமல் தமிழ் மக்களையும் 'பேய்க்காட்ட'ப்பார்க்கிறார்கள்.

"காலம் பெறுமதியானது
காலத்தை வீணாக்காதீர்கள்"
துரித சலவைக்கு
மில்க்வைற் சலவைப் பவுடர்.
மில்க்வைற் சலவைப் பவுடர்
ஆடைகளின் அழுக்கை
மின்வேகத்தில் அகற்றுகின்றது.
இன்றே வாங்கி பாவியுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிற்சாலை,
த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.

யாழ் நகர் வருகிறார்கள்

பிரவுண்சன் இண்டஸ்ரீசாரின் ஆதரவில் கொழும்பு மேடைகளிலும் வானொலியிலும் பெரும் புகழ்பெற்ற நாடகம்.



டாக்டர் கோவூரின்...
நம்பிக்கை

26, 27-10-74 யாழ் வீரசிங்கம் மண்டபத்திலும்
28—காரை நகரிலும்
29—கொடிகாமத்திலும்
31 — திருநெல்வேலியிலும்
நவம்-2—சாவகச்சேரியிலும் மேடையேறுகின்றது.

# கடையடைப்பும் பாடசாலைப் பகிஷ்கரிப்பும்

# நூற்றுக்கு நூறு வெற்றி!

## மாணவிகளைக்கொண்டு 'பாண்ட்' வாசிக்கும் திட்டம் படுதோல்வி!

**பிரதமர் வருகையை எதிர்த்து தமிழர் கூட்டணியின் வேண்டுகோட்படி யாழகமெங்கும் நடைபெற்ற ஹர்த்தால் பூரண வெற்றிபெற்றது. பாடசாலைகள் பகிஷ்கரிப்பும் கடையடைப்பும் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றியடைந்தன. சிறிமா அம்மையார் யாழ்ப்பாணத்தில் இருந்த நாட்களில் யாழ்ப்பாண வீதிகள் எங்கும் செத்த வீடாகக் காட்சியளித்தன. மக்கள் நடமாட்டம் குறைந்ததால் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன.**

பிரதமர் வருகையை எதிர்க்குமுகமாக அக்டோபர் 3ம் 4ம் 5ம் நாட்களில் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கும்படி மாணவர்களையும் பெற்றோர்களையும் தமிழர் கூட்டணியும் தமிழ் இளைஞர் பேரவையும் கேட்டுக்கொண்டிருந்ததற்கிணங்க மூன்று நாட்களும் பாடசாலைப் பகிஷ்கரிப்பு நூற்றுக்கு நூறு வீதம் வெற்றியடைந்தது. யாழ் மாவட்டத்திலுள்ள 42 மகாவித்தியாலயங்களும் பிள்ளைகள் செல்லாமையால் தூங்கி வழிந்தன. பல பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் தூங்கி வழிந்துகொண்டிருக்கக் காணப்பட்டார்கள். ஏறத்தாழ ஒரு லட்சத்து ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் இந்த 3 நாள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

பலாலி விமான நிலையத்தில் பிரதமரை வரவேற்க தேர்ச்சி பெற்ற யூனியர், சீனியர் பாண்ட் வாத்திய கோஷ்டிகள் செல்லமாட்டா என்பதை முன் அனுபவத்தால் புரிந்துகொண்ட யாழ் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் இம்முறை பிரதமர் வரவை யொட்டி முற்றிலும் புதிய ஒரு கோஷ்டியை தெரிந்து பயிற்றுவித்தார். ஆயினும் புதியவர்களும் கடைசிநேரத்தில் பலாலிக்கு வரமாட்டோம் என்று அதிபரின் காலை வாரிவிட்டனர்!

கல்விக்கந்தோர் உத்தியோகத்தர் ஒருவரின் கெடுபிடியைத் தாங்கமாட்டாது யூனியர், சீனியர் புதிய கோஷ்டிகள் மூன்றையும் சேர்ந்த மாணவிகளது வீடுகளுக்கு ஆசிரியைகளை அனுப்பி வரவேற்பில் கலந்து கொள்ளவராவிட்டால் பாடசாலையில் இருந்து நீக்கப்படுவர் என்று சம்பந்தப்பட்ட மாணவிகளுக்கு அச்சுறுத்தப்பட்டது.

அப்படி இருந்தும், மூன்று குழுவிலிருந்தும் தனிக் கோஷ்டி ஒன்றை தெரிவதற்கு போதிய மாணவிகள் வராமையால் விடுதியிலுள்ள மாணவிகள் சிலரைப் பிடித்து அவர்களுக்கு உடையணிந்து பாண்ட் வாத்தியகோஷ்டியாக ஒரு 25 பேரைப் பலாலிக்கு அனுப்பிவைத்தார்கள். பலத்த மழை காரணமாக அதிபரின் மானம் தப்பி பிழைத்தது. வாத்திய கோஷ்டியினர் வாத்தியம் இசைக்க வராமைக்காக வாராத மாணவிகள் யாரும் பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டால் பாடசாலையில் போராட்டம் நடைபெறுவது நிச்சயமாம்.

தெருக்களில் அணிவகுத்து நிற்க டொன் பொஸ்கோவில் இருந்து 3 சிறுமிகளும் திருக் குடும்ப கன்னியர் மடத்தில் இருந்து விடுதி மாணவிகள் 8 பேரும் புனித யோவான் கல்லூரி விடுதியில் இருந்து ஒரு சிலருமே வந்தார்கள். கட்டாயத்துக்குப் பயந்து கல்லூரிகளது ஆசிரிய ஆசிரியைகள் ஆங்காங்கே நிற்க காணப்பட்டனர். மற்றப்படி பலாலி வீதி முழுமையும் ஆரியகுளச் சந்தி புற நீங்கலாக வெறிச்சோடிக்கிடந்தது.

வழமையாக யாழ்ப்பாண நகரின் வாயிலாக அமையும் திருநெல்வேலி சிவன் கோயில் வீதி—பலாலிச் சந்தியில் வைத்தே பிரமுகர்களை எதிர்கொண்டு வரவேற்கும் யாழ்ப்பாண மாநகர சபை இம்முறை பிரதமரை வரவேற்பதற்கு ஆட்களைக் கூலிக்கும் அமர்த்த இயலாது அங்கிருந்து ஆரியகுளச் சந்திக்கு பின்வாங்கிக் கொண்டது.

ஆரியகுளச் சந்தியில் யாழ் நகர் சிங்கள மக்கள், நாக விகாரைக்கு விஜயம் செய்திருந்த வெளியூர் யாத்திரீகர்கள் சிங்கள மகா வித்தியாலய மாணவர்களை வைத்து கூட்டத்தை பெருப்பித்து காட்ட வாய்ப்பாக இரு பெரிய சிகரங்களால் தெருக்களின் பெரும் பகுதியை நிறைத்திருந்தார்கள் பலாலி வீதியில் சந்தடியின்றி தெரு வெறிச்சோடியிருந்ததைப் பார்த்து அம்மாமுகத்தை 'ஊம்' என்று வைத்திருந்தா. மோட்டாரோ 70, 75 மைல் வேகத்தில் பறந்தது.

### கடையடைப்பு

குடா நாடு பூராவும் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றிகரமாக நடைபெற்றது. மாஸ்கோ கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த திரு. பூபாலசிங்கத்தின் பத்திரிகைக் கடை, பேக்கரி ஒன்று, கோட்டல் ஒன்று என மூன்றே மூன்று வர்த்தக ஸ்தாபனங்கள் மட்டுமே திருஷ்டி பரிகாரமாக அன்று கடை திறந்திருந்தன.

"யாழ் நகரில் நகர வீதிகளை நீலக்கொடியால் நிரப்ப முடிந்த துரையப்பாவுக்கு ஆட்களை தேடிப்பிடிக்க முடியவில்லை. நகரை அலங்கரித்தவர்கள் மாநகரசபை ஊழியர்களும் பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்களுமே. இதைப் பிரதமரின் வருகைக்கு மூன்று தினங்களுக்கு முன்பே இங்கு வந்திருந்த பிரதமரின் மருமகன் திரு. குமார் ரூபசிங்கா நன்கு விசாரித்துத் தெரிந்துவைத்திருக்கக்கூடும்!

### நகர வரவேற்பு

நகர வரவேற்புக்கு வழமையாக 400 அல்லது 500 அழைப்பிதழ் மட்டுமே அனுப்புவர். இம்முறை ஆயிரக் கணக்கில் அச்சடிக்கப்பட்டனவாம். மாநகர உத்தியோகத்தர்களுக்கே கிடைக்காத அழைப்பு இம்முறை நகர்சுத்தி, மலசுத்திதொழிலாளர்களுக்கும் அவர்களது

## பிரதமரின் விஜயம் பிசுபிசுப்பு!

சுற்றத்தினருக்கும் அனுப்பப்பட்டது பெரிய புதுமை. எதிர்பாராத இப் புரட்சி மேற்படி தொழிலாளரை திணறடித்தது. இனிமேலும் இதுதொடருமா? அல்லது அம்மாவுக்கு ஆள்பிடிக்க எடுக்கப்பட்ட துரையப்பாவின் பிறிதொரு சதியா என்று அவர்கள் கேட்கிறார்கள்.

யாழ் மாவட்டத்திலுள்ள சிங்கள பொலிஸ் உத்தியோகத்தினரது குடும்பத்தினர் மாநகரசபை ஊழியர்

—5-ம் பக்கம் பார்க்க

—3-ம் பக்கத் தொடர்

உண்ணுவிரதம் நடைபெற்றிருக்கிறது—பொலிசாரே ஏமாறும் வகையில்!

ஆம் நண்பா, பிரதமர் நல்லூர் முருகன் ஆலயத்திற்கு வரும் சமயத்தில்—நல்லூர் முருகன் ஆலய மண்டபத்தில் சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் தாய்மாரும் உறவினரும் உண்ணுவிரதம் பிரார்த்தனையிலீடுபடவிருந்ததையறிந்த பொலிசார், நல்லூர் முருகனுக்கு $13\frac{1}{2}$ மணிநேரம் தடுப்புக்காவல் 'வாரண்டு' பிறப்பித்து, அக்டோபர் 4ந் திகதி இரவு 12 மணிமுதல்—5ம் திகதி மதியம் சிறிமா அம்மை கோவிலுக்கு வந்து செல்லும் வரை—வெளியிலிருந்து பக்தர்களைப் பார்க்கக்கூடாதென்று தடைவிதித்தனர்! கடவுளுக்கும் இந்த அரசின் கீழ் தடுப்புக்காவல்!! தடுப்புவேலி நல்லூர் ஆலயப்பகுதியைச் சுற்றியெழுந்தது; நல்லூர் முருகனை வணங்குவதற்காக அன்றாடம் சாதாரணமாகச் செல்லும் பக்தர்களும் கூட அன்றைய தினம் தடுக்கப்பட்டார்கள்! அடித்து விரட்டப்பட்டார்கள்!!

முருகன் சந்நிதி முன்னால் உண்ணுவிரதம் இருந்திடும் வாய்ப்பை தமிழ்த் தாய்மார்களிடமிருந்து பொலிசார் பறித்துவிட்ட போதிலும் உண்ணுவிரதத்தை பொலிசாரால் தடை செய்திட முடியவில்லை!

ஆம் நண்பா, நல்லூர் முருகனிடம் செல்லக்கூடாது என்று பொலிசாரால் தடுக்கப்பட்ட தமிழ்த்தாய்க் குலத்தை அன்னை வீரமாகாளி அரவணைத்துக்கொண்டாள்! சங்கிலி மன்னன் வழிபட்ட அந்த அன்னையின் ஆலயத்தின் முகப்பில்—சங்கிலி மன்னன் 18 நாள் போர் புரிந்து தமிழ்ப் பகைவர்களின் தலையை உருட்டிய அந்த வீரம்செறிந்த மண்ணில்—தமிழுக்காக — தமிழர் விடுதலைக்காக இரண்டாண்டுகளாக சிறையில் செந்நீர் சிந்திவரும் தமிழ்க்குல விளக்குகளை ஈன்றெடுத்த தாய்மாரும் உற்றார் உறவினரும் தியாகி சிவகுமாரனின் தாயார் தலைமையில் உண்ணுவிரதம் இருந்து—பிரார்த்தனையிலீடுபட்டிருந்த காட்சி கண்டு உருகாத உள்ளங்கள் இருந்திட முடியாது!

உணர்ச்சிக் கவிஞரின் வீரமிகு கவிதைகளையும், மற்றும் தமிழ் எழுச்சிக்கவிதைகளையும் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பாடிட, எல்லோருமாக சேர்ந்து பாடியபடி விரதமிருந்த தாய்மார் அங்கு உண்ணு நோன்பில் ஈடுபட்டிருந்த காட்சியை அந்த வழியால் நல்லூர் முருகன் கோவிலுக்கு செல்லும் நேரத்தில் — சிறிமா அம்மையாரும் ஒரு கணம் பார்த்துவிட்டு — முகத்தைத் திருப்பிக்கொண்டார்!

குற்றமுள்ள அவர் நெஞ்சம் குறுகுறுத்ததோ என்னவோ—அதே வழியால் திரும்பிவருவதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தும் பாதையை மாற்றிக்கொண்டு வேறுவழியால் ஓடிவிட்டார் சிறிமா அம்மையார்!

வழமையாக கோவிலுக்கு சென்று வழிபடும் பக்தர்களைத் தடுத்து நிறுத்தி தடுப்புவேலி போட்டு—முருகனையும் "தடுப்புக்காவலில்" வைத்துவிட்டுத்தான் — நல்லூருக்குள் சிறிமா அம்மையார் நுழைய முடிந்தது என்றால்—அது தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு—பகிஷ்கரிப்பு இயக்கத்துக்கு கிடைத்த பெரிய வெற்றியென்பதை யாரும் மறுத்திட முடியாது!

இவ்வாறு மக்களின் பல்வேறு எதிர்ப்புக்களுக்கும்—பகிஷ்கரிப்புக்கும் மத்தியில் பாதுகாப்புபடையின் துணையுடன்—கண்ணாடிகள் மூடப்பட்டுப் பூட்டப்பட்ட காரில் — மின் வேகத்தில் அம்மையார் அங்கும் இங்கும் இரண்டொரு நிகழ்ச்சிகளில் மட்டும் கலந்துகொண்டுவிட்டு கொழும்பு திரும்பிவிட்டார்! 'மக்கள் பிரதமரால்' திறந்த காரில் ஊர்வலமாக வந்துகொள்ள முடியவில்லை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும்!!

அம்மையார் புத்திசாலித்தனமுள்ளவராக இருந்தால்—யாழ்ப்பாண விஜயத்தின் பின்னராவது தமிழ் மக்களின் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு — குமாரசூரியர், துரையப்பா போன்ற சுயநலக்கும்பல்களின் அலைகளால் இழுபடாது — தமிழ் மக்களின் உண்மையான தலைவர்களை — தமிழர் கூட்டணியை அழைத்துப் பேசி தமிழர் பிரச்சினைகளுக்கு சமரசத் தீர்வு—கௌரவமான தீர்வு — கண்டிட முயற்சிக்கட்டும்!!

அப்படியின்றி—தொடர்ந்தும் தமிழ் மக்களின் ஆதரவு தமது அரசுக்கே உண்டென்று வீம்புக்காக விட்டுக்கொடாமல் அவர் கூறுவாரானால்—காங்கேசன்துறை இடைத்தேர்தலை உடன் நடத்திப் பார்க்கட்டும்!

பிரதமரின் யாழ் விஜயமும்—அங்கு அவர் கண்ட மக்களின் எதிர்ப்புணர்வும் — அவரைச் சிந்திக்கவைத்து புதிய பாதையில் செலுத்திடத் தவறுமானால் — நாடு இரண்டாவது உறுதி! தமிழ் ஈழம் தனிநாடாவதும் உறுதி!

தமிழ் சமுதாயம் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் இலட்சிய உறுதியையும், விடுதலை உணர்ச்சியையும் கிஞ்சிற்றும் இழந்துவிடவில்லையென்பதையும் தமிழர் கூட்டணியின் ஆணைப்படி—தலைவர்கள் காட்டும் பாதையில்—நடைபோட்டிட தமிழ்சமுதாயம் எந்தக் கட்டத்திலும் தயாராகவே இருக்கிறது என்பதையும், தமிழ் இளைஞர்கள் எந்த அச்சுறுத்தலுக்கும், அடக்குமுறைக்கும் தலைசாயாது வைர நெஞ்சினராக விடுதலைப் பாதையில் முன்னேறி—எந்த நிலையை சந்தித்திடவும் எந்த விலையைக் கொடுத்திடவும் — தயாராக இருந்திடுகின்றனர் என்பதையும் பிரதமர் விஜயத்தை எதிர்த்து நடைபெற்ற ஹர்த்தால் பகிஷ்கார நடவடிக்கைகளின் வெற்றி திட்டவட்டமாக — தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டி ஐயமுண்டு பயமில்லை மனமே! என்று நம்மை பாடிடத் தூண்டுகின்றன!

**யாழ்ப்பாணத்தில்நடைபெற்றபொதுக் கூட்டத்தில் வைத்து — தமிழர் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லையென்பதை பிரதமர் முதன் முதலாக பகிரங்கமாக ஏற்றுக் கொண்டிருக்கிறாரென்றால் — அது தமிழ் மக்கள் காட்டிய வலிமையான எதிர்ப்பின் விளைவுதானே தவிர— தமிழ் மக்களுக்கு எல்லா உரிமைகளும் கிடைத்துவிட்டதாக பிதற்றித்திரியும் பித்தர்களும் பேயர்களும் அம்மையார் காலைக்கழுவி அர்ச்சித்ததால் ஏற்பட்ட விளைவு அல்ல என்பதை தமிழ் மக்கள் அறிந்திடுவர்!**

அடக்குமுறையை, அநீதியை, கொடுங்கோன்மையை, அடிமைத்தனத்தை எதிர்த்து விடுதலைக்காக என்ன விலை கொடுத்திடவும் தமிழினம் எவ்வளவு தூரம் தயாராக மாறுகிறதோ அவ்வளவு தூரம் வெற்றி நமதே!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

# எருமைப்பாடு மாநாடு

(29-9-74 இதழ் தொடர்ச்சி)

காட்டில் நடைபெறும் எருமைப்பாட்டு மாநாட்டில் பொதுவுடமை எருமைத் தோழர் பொன்னம்பல சீதனத்தார் பின்வருமாறு முழங்குகிறார்:-

"தோழர்களே! சிங்கம்—எருமை என்ற பேதம் எனக்கில்லை. தொழிலாள விலங்குகள் இங்கும் அங்கும் இருக்கின்றன. இந்தக் காட்டில் கல்லிலும் முள்ளிலும்தொழிலாள விலங்குகள் காலில் செருப்பில்லாமல் அலைகின்றன. தொழிலாள மிருகங்கள் காலில் செருப்புபோடும் நிலை வரும்வரை நான் செருப்புப்போட மாட்டேன். இது சபதம்!"

இப்படி வெறுங்காலோடு நின்று எருமைத்தோழர் பொன்னம்பல சீதனத்தார் பேசும்போது மேடையிலும் மண்டபத்திலும் இருந்த ஏனைய முற்போக்கு எருமைத்தலைவர்கள் எல்லாம் தங்கள் பாலிஷ் பண்ணிய சப்பாத்துக்களைப் பார்த்து "இந்த எருமை என்ன நமக்கே நக்கல் அடிக்கிறதா?" என்று முணுமுணுத்துக் கொள்கிறார்கள்-

தோழரின் பிரசங்கமும் தலையோ வாலோ இல்லாமல் முடிகிறது. அடுத்தபேச்சாளராக காடாளுமன்ற உறுப்பினரும், ஆளும்கட்சி எடுபிடியுமான "சிமோல் எருமை" அவர்களின் பெயர் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறுகிறது அல்லவா? இதோ திருவாளர் சிமோல் எருமை வருகிறார் — வந்துகொண்டிருக்கிறார் — வந்துவிட்டார் — பேசப்போகிறார் — பேசத் தொடங்கிவிட்டார் — பேசுகிறார்.

'அன்பர்களே' முற்போக்கு எருமைகள் சங்கத்தின் சார்பில்இந்தமாநாட்டை இன்று நடத்துகிறோம். முற்போக்கு என்றால் என்ன?

பேச்சின்துவக்கத்திலேயே 'சிமோல் எருமையார்' இப்படிக்கேட்டதுதான் தாமதம் கூட்டத்திலிருந்து முற்போக்கு என்றால் என்ன என்று தெரியாதா? காட்டு விலங்குகளின் கிராம சபைக் கட்டிட மோடு பிரித்து ஒடு கழற்றி—ஒட்டறை கலையாவிதத்தில் உள்ளே இறங்கி காசைக் கொள்ளையடிக்கும் கெட்டித்தனம் அல்லவா முற்போக்கு?' என்று ஒரு கூச்சல் திரும்பவும் கூட்டத்திலிருந்து கிளம்புகிறது.

"விடாதீர்கள்—அந்த எருமைப் பொடியனைப் பிடியுங்கள்" என்று ஆத்திரப்பட்ட முற்போக்கு எருமைகள் பதிலுக்கு கூச்சலிடுகிறார்கள். மண்டபத்தில் காவலுக்கு நின்ற சிங்கப்பொலிஸ்காரர்கள் "கொற கொற" என்று அந்த் ரோஷமுள்ள இளம் எருமையைப் பிடித்து வெளியே இழுத்துச் தள்ளுகிறார்கள்.

மண்டபத்தில் ஒரே பரபரப்பு — அறைகுறையாகத் தனது பேச்சை முடித்துக் கொண்டு வெலவெலத்துப் போனமுகத்தோடு நாற்காலியில் உட்காருகிறார் 'சிமோல் எருமையார்.'

மாநாடு இப்போது முடிவடையும்கட்டத்தைநெருங்கிக்கொண்டிருக்கிறது. சிங்க மகாராணி அரிமாவோ அம்மையாரின் புத்திரனும் 'இளம் சிங்கங்கள் கட்சி' தலைவருமான அனுரபண்டன் மாநாட்டின் கடைசிப் பேச்சாளராக மேடைக்கு வருகிறார். உடலைச்சிலுப்பிவிட்டு சிங்கப் பாஷையில் முழக்கமிடும் அனுரபண்டன் பேச்சை இனிக்கேட்போம்...

"சபையோர்களே!" என்று அவர் தனது பேச்சை ஆரம்பிக்கிறார். 'இந்தக் காட்டில் சிங்கங்களும் எருமைகளும் ஆகிய நாம் ஒற்றுமையாக வாழவேண்டும். 'காட்டின் ஒற்றுமை' என்ற உயர்ந்த லட்சியத்தை அடைவதில் முற்போக்கு எருமைகள் பலர் சிங்கங்களாகிய எங்களோடு ஒத்துழைப்பதை நான் மனமாரப்பாராட்டுகிறேன்.

"நான் எருமைகளின் புல்வெளிப் பிரதேசத்துக்கு போனபோது அங்குள்ள எருமைகள் நகரசபைத்தலைவர் திருவாளர் துரோகப்பு எருமையார் என்னை மிக அன்போடு வரவேற்றார். நான் இளைய சமுதாயத்தைச் சேர்ந்த இளம் எருமைகளோடு மனம் விட்டுப்பழக விரும்புவதாக அவரிடம் கூறினேன். அப்பெரியார் எனக்கு எருமைகளில் நல்ல

## கவரிமான்

'இளங்குட்டிகளை' அறிமுகப்படுத்திவைத்தார். நான் அவர்களோடு பின்னிப் பிணைந்து இரண்டறக்கலந்து பழகினேன். இந்த அன்பும் உறவும்தான் காட்டுராஜ்யத்தில் இன்றைய அவசியத் தேவையாகும். நாங்கள் எருமைகளாகிய உங்கள் உரிமைகளை கட்டாயம் தருவோம். புல்வெளிப்பிரதேச எருமை நகரசபைத்தலைவர் துரோகப்பு எருமையாரிடம் நாலு படித்த எருமைகளுக்கு சிலை வைக்கும் படி நான்தான் கூறினேன். பாருங்கள்! உங்கள் உரிமைகளை எப்படியெல்லாம் கவனிக்கிறோம் பார்த்தீர்களா?"

இப்படி முழங்கிவிட்டு இளம் சிங்கக்குட்டி அனுர பண்டன் தன் இருக்கையில் அமர்கிறார். மகாராணியாரின் மகாபுத்திரனுடைய மகாபேச்சோடு மகாநாட்டின் மகா பிரசங்கங்கள் அனைத்தும் முடிவடைகின்றன.

என்ன? முடிவடைகின்றனவா? இல்லை— பிரசங்கங்களில் நன்றியுரை என்று ஒரு பிரசங்கம் இருக்கிறது அல்லவா? இதோ 'வனகரன்' பத்திரிகைக் கடைசிப் பக்கத்தில் 'கண்ணும் காதும்' பகுதியை நடத்திவரும் புதிய உத்திகளின் மன்னரான தோழர் முய்தீன் எருமை நன்றியுரைசொல்ல வருகிறார்—கவனிப்போம்.

வந்தவர், தோழர்களே! 'நன்றியுரை' என்பது ஒரு பழைய உழுத்துப்போன சம்பிரதாயம். ஆகவே புதுமையாக உங்களுக்கு 'புதுக் கவிதை' ஒன்றைப்படித்துக் காட்டுகிறேன். என்று சொல்லிவிட்டு கையிலிருந்த ஒருசிறு கட்டுரையை வாசிக்கிறார்.

"இனவெறியரே!
நாங்கள் மாற்றார் கால்களை
முத்தமிடுகிறோமா?
யார் அந்த மாற்றார்?
சிங்கங்கள் தானே?
சரி ஐயா!
சிங்கங்களின் வாய்கள்
நம்மைப் புசிக்கின்றன!
கால்களுமா? இல்லையே!
விலங்குகளின் கால்கள்
தொழிலாளிகள்!
கல்லிலும் முள்ளிலும்
நடக்கும்
கடும் உழைப்பாளிகள்
அவை
நாங்கள்—
தொழிலாளிகளை முத்த
மிடும் தொழிலாளிகள்!"

முய்தீன் எருமையார் புதுக் கவிதையை முடிக்கிறார். முழங்கும் கரகோஷம் வானைப்பிளக்கிறது. முற்போக்கு எருமைகள் நடத்திய மாநாட்டு நிகழ்ச்சிகள் அனைத்துமே முடிவடைகின்றன

இந்த எருமைப்பாடு மாநாட்டில் உரை நிகழ்த்திய யாரும் எருமைகள் படும் பாட்டைப்பற்றி ஏதும் பேசவில்லை. என்றாலும் எருமைகள் சமுதாயத்தின் நலன் கருதி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நாம் பாராட்டத் தான்வேண்டும். இதோ அத் தீர்மானங்களில் மூன்று முக்கியமான தீர்மானங்களைக் கீழே தருகிறோம்.

(1) சிங்கங்கள் எருமைகளைப்பெருமளவில்கொன்று குவிப்பதை இம்மாடு கண்டிக்கிறது. இனிமேல் குறைந்த தொகையான எருமைகளையே சிங்கங்கள் கொல்லவேண்டும் என்று சட்டமியற்றுமாறு மாநாடு காட்டரசாங்கத்தைப் பணிவோடுவேண்டுகிறது.

(2) காட்டுத்தொழில் நுட்பக் கல்லூரி விடுதியில் எருமைக் குட்டிகளை சிங்கக் குட்டிகள் சப்பாத்துக் கால்களால் உதைத்த நிகழ்ச்சிக்கு மாநாடு வருத்தம் தெரிவிக்கிறது. எதிர்காலத்தில் சிங்கக் குட்டிகள் எருமைக் குட்டிகளை உதைப்பதானால் சப்பாத்துப் போடாத வெறும் கால்களால் உதைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறது.

(3) மலைப் பிரதேசம் சார்ந்த புல்வெளியில் வாழ்ந்த சில எருமைகளை அவை வாழ்ந்த புல்வெளியை அசுத்தப்படுத்துவதாகக்கூறி காட்டு அரசாங்க லொறியில் சிங்கப்பொலீசார் ஏற்றிவந்து நடுவீதியில் இறக்கிவிட்டுச் சென்ற சம்பவத்துக்கும்இம்மாநாடு வருத்தம் தெரிவிக்கிறது. இனிமேல் இவ்வாறு லொறிகளில் ஏற்றினால் நடுவீதிகளில் இறக்கிவிடாமல் வீதியின் ஓரங்களில் எருமைகளை இறக்கிவிடவேண்டும் என்றும் மாநாடு யோசனை தெரிவிக்கிறது.

# சிங்களம் வாழ்கிறது - தமிழ் ஈழம் தாழ்கிறது!

(முன் தொடர்ச்சி)

11. வைத்தியத்துறையிலும் தமிழ்ப்பகுதிகள் மட்டுமன்றித் தமிழரும் பாதிக்கப்படுகின்றனர். தமிழ்ப் பகுதிகளிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் மருந்துகளும் போதிய அளவு இல்லை; விசேட வைத்தியர்களும் இல்லை. யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் ஏழுவைத்திய நிபுணர்களின் இடம் நிரப்பப்படாமலுள்ளது (பேரவை அறிக்கை 68.94பக்: 1237) இந்த அரசாங்கம் தமிழருக்கு எவ்வளவு 'நன்மை' செய்கிறது பார்த்தீர்களா?

12. யாழ்ப்பாண அரசு வைத்தியசாலையில் 11. 1 நோயாளருக்கு ஒரு தாதி—ஆனால் குருநாகல் அரசினர் வைத்தியசாலையில் 6. 1 நோயாளருக்கு ஒரு தாதி வதுளை அரசினர் வைத்தியசாலையில் 6. 9 நோயாளருக்கு ஒரு தாதி காலி அரசினர் வைத்தியசாலையில் 6. 3 நோயாளருக்கு ஒரு தாதி. வதுளை வைத்தியசாலையிலுள்ள நோயாளரின் தொகை 804; தாதிகள் தொகை 116. யாழ்ப்பாண வைத்தியசாலையிலுள்ள நோயாளர் தொகை 969—தாதிகள்தொகை88. வதுளையோடு ஒப்பிடும் பொழுது யாழ்ப்பாணத்துக்கு இன்னும் 51 தாதிமார் நியமிக்கப்படவேண்டும். (தே. அ. பேரவை அறிக்கை 18-7-73 பக்கம் (2463-4) இந்த அரசாங்கம் தமிழ்நோயாளரைக்கூட வாட்டிவதைக்கிறதே!

13. இந்த ஆண்டு தாதிமார் பயிற்சிக்கு 400 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் 39 பேர் மட்டுமே தமிழில் பயிற்சி பெறுவோர். வடமாகாணத்தில் 13 தொகுதிகளிலிருந்தும் 26பேர். இவர்களில் இரண்டு பேர் சிங்களவர். கிழக்கு மாகாணத்தில் 11 தொகுதிகளிலிருந்து 26 பேர். இவர்களில் 11 பேர் சிங்களவர். ஏனைய ஏழுமாகாணங்களிலுமிருந்து 358 பேர்—இவர்களில் தமிழர் ஒருவருமில்லை சமத்துவம் சமதர்மம் பேசும் அடிவருடிகளே! குடியைக் கெடுப்பவர்களே! சிறிது சிந்தித்துப்பாருங்கள்! கொழும்பில் கண்டியில் வதுளையில் தமிழரில்லையா? தமிழ் மாகாணத் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 52 பேரில் 13 பேர் ஆதாவது 25% சிங்களவர். சிங்கள மாகாணத் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டோரில் ஒருவரேனும் தமிழரில்லை.

இந்த அநியாயம் மட்டுமன்று! வடமாகாணத் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் இருவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளர். ஆனால் சிங்களப் பகுதித் தொகுதிகள் 127இல் 21 தொகுதி தவிர்ந்த ஏனைய 106தொகுதிகளிலும் தொகுதிக்கு மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டுளர். யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலைக்கே 57 தாதிமார் தேவையாயிருக்கும் போது பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழரின் தொகை 39 மட்டுமே. சிங்களத் தொகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட விகிதத்தின்படி குறைந்தது 64 தமிழராகுதல் தெரிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் ஆனால் தெரிவு செய்யப்பட்டோர் 39 பேர்! இந்த அரசாங்கம் தமிழருக்குக்காட்டும்கருணை என்னே! (விபரங்களுக்கு தே. அ. பே. அறிக்கை 8.8.74 பக்: 1369-71.)

14. இந்நாட்டில் 330க்கு மேற்பட்ட வைத்தியசாலைக் கட்டிடங்களைக் கட்டிய சுகாதார அமைச்சு தமிழ்ப் பகுதியில் எத்தனை கட்டடங்களைக் கட்டியுள்ளது? சங்கானையில் ஒரு சவ அறையை கட்டியுளதென வட்டுக்கோட்டை பா. உ. பெருமைப்படலாம்! யாழ்ப்பாண வைத்தியசாலையில் வெளி நோயாளர் கட்டடம் எத்தனை ஆண்டுகளாகக் கட்டாமல் இழுபடுகிறது. புற்றுநோய்ச் சிகிச்சைக்கு இன்னும் யாழ்ப்பாணத்தில் போதிய வசதி செய்யப்படவில்லையே!

15. தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்குக் கங்குமில்லை கரையுமில்லை. உலகில் வேறெந்த நாடுகளிலும் இலங்கையிலுள்ள சிறுபான்மையினம் போல உரிமை பெற்ற சிறுபான்மை இனம் இல்லை என்று பொது நல நாடுகளின் பாராளுமன்ற கூட்டத்தில் பண்டாரநாயக்கா நினைவு மண்டபத்தில் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா முழங்கினார். தமிழினம் போல அடிமைப்படுத்தப்பட்ட அநியாயத்துக்குட்படுத்தப்பட்ட சிறுபான்மையினம் வேறெந்த நாட்டிலுமில்லை என்பது அரசாங்கத்தின் அடிவருடிப்பிழைக்குந் தமிழரின் உள்மனத்திலும் ஒலித்துக்கொண்டிருப்பதை அவர் அறியாதவரா?

சிங்களச் சட்டம் நடைமுறைக்கு வருமுன் ஆங்கிலம் மூலம் உத்தியோகங்கள் பெற்ற சிங்களவர்கள் போட்டிப் பரீட்சைகளுக்கு ஆங்கிலத்திலும் எழுதலாம்; தங்கள் தாய்மொழியாம் சிங்களத்திலும் எழுதலாம் தமிழ் உத்தியோகத்தர்களோ ஆங்கிலத்தில் எழுதலாம் ஆனால் தாய் மொழியாம் தமிழில் எழுத முடியாது! முடியாது! விரும்பினால் அந்நிய மொழியாம் சிங்களத்தில் எழுதலாம்! தமிழ் அடிமைகளுக்கு ஒரு நீதி ஆளும் சிங்களருக்கு ஒரு நீதி! தங்கள் தாய் மொழியில் எழுதும் உரிமையைப் பெறத் தமிழ் உத்தியோகத்தர்களும் பா. உக்களும் செய்த முயற்சிகள் இன்னும் பயன் தரவில்லை!

16. சிங்கள மொழிச் சட்டம் நடைமுறைக்கு வருமுன் நியமனம் பெற்ற தமிழ் அரசாங்க உத்தியோகத்தரின் உத்தியோக உயர்வுக்கு சிங்களத் தகைமை தேவையில்லை எனத்திறைசேரிச் சுற்றறிக்கை 700 (2—V ண) கூறுகிறது. ஆனால் எழுதுவினைஞர்களின் பதவி உயர்வுக்கு சிங்கள தேர்ச்சி வேண்டுமென்று அமைச்சர் பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்கா அடம் பிடிக்கிறார்.

17. பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக அரசாங்க சேவையிருந்த தமிழர்கள் பலர் சேவையில், உறுதிப்படுத்தப்படாமல், இருந்த காரணத்தால், ஒருமாத அறிவித்தலோடு வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். சிங்களம் உரியகாலத்தில் சித்தியடைந்தவர்கள் கூடதாமாகவே சோதனை எழுதவில்லை என்பன போன்ற காரணங்கள்தான் குற்றச்சாட்டுக்கள்தாமே பரீட்சை எழுதவில்லையென்பதை நிரூபிக்க, பரீட்சை மண்டபத்திலே, மேற்பார்வையாளரால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுபரீட்சைப்பகுதிக்கு முறையீடுசெய்யப்படவில்லை. 'அரச ஆலோசனை சபைக்கு' (முன்னுள் P. S. C.) மேன்முறை செய்யப்பட்டு, ஒன்றரை ஆண்டுகளாகியும், பதில் கிடைக்காது, தொழில் எதுவும் செய்யமுடியாத நிலையில் பல தமிழ்அரசாங்க ஊழியர் கவலைப்படுகின்றார்கள் 'நான் பரீட்சைஎழுத

—5-ம் பக்கம் பார்க்க

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# தமிழினத்தை ஒற்றுமைப்படுத்தியவர் அமரர்

## கிழக்கின் பேரொளி...

—1-ம் பக்கத் தொடர்

"இராசமாணிக்கம் அவர்களின் பிரிவால்—தமிழரசுக் கட்சி விசுவாசமிக்க ஒரு ஊழியரை இழந்து விட்டது! ஒரு சிறந்த தமிழ் தேசிய வாதியாக விளங்கியவர் திரு. இராசமாணிக்கம். தமிழினத்தின்மீட்சிக்காக நடைபெற்ற போராட்டங்களில் எல்லாம் முன்னின்று தோள் கொடுத்தவர்; சிறைசென்றவர்; கட்சியின் தலைமைப் பொறுப்பை மூன்று முறை ஏற்று திறமையாக இயக்கத்தைக் கொண்டு செலுத்தியவர்; தமிழ் மக்களிடையே ஊறியிருந்தபிரதேசவாதத்தை களைந்தெறிந்து தமிழினத்தை ஒன்றுபடுத்துவதில் பெரும் பணியாற்றியவர்; அத்தகைய ஒரு பெருமகனின் பிரிவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகிவிட்டது!"

—இவ்வாறாக தமிழரசுத் தந்தையும் தமிழர் கூட்டணித் தலைவருமாகிய தந்தை செல்வா அவர்கள் நாத்தழுதழுக்க சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

எட்டாந் திகதி காலை வானொலியில் தலைவரின் மரணச் செய்தி கேட்டதும் தமிழ் ஈழம் முழுவதும் துக்கத்திலாழ்ந்தது. பல இடங்களில் கடைகள் பூட்டப்பட்டுகறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டன. யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் தமிழரசுக் கட்சிக்கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப் பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும்—குறிப்பாக பட்டிருப்புத் தொகுதியிலும் சோகமும் வேதனையும் நிறைந்து காணப்படுகிறது.

1956ம் ஆண்டு ஐ. தே. கட்சி சம அந்தஸ்து கொள்கையை கைவிட்டு தனிச்சிங்களக்கொள்கையை ஏற்ற சமயத்தில், அக்கட்சியை விட்டு வெளியேறிய திரு. இராசமாணிக்கம், தமிழரசுக் கட்சியில் தன்னையும் ஒருவராக இணைத்துக்கொண்டார் அன்று தொட்டு இறக்கும் வரை கட்சியின் இலட்சியத்திலும் தந்தை செல்வா மீதும் அப்பழுக்கற்ற விசுவாசம் மிகுந்தவராக விளங்கியவர் திரு. இராசமாணிக்கம்.

1960ம் ஆண்டு நடைபெற்ற இரண்டுபொதுத் தேர்தல்களிலும், 1965நடைபெற்ற பொதுத்தேர்தலின் போதும் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு பட்டிருப்புத் தொகுதியின் முடிசூடா மன்னராக பாராளுமன்றம் சென்றவர். 1958, 1961ம் ஆண்டுகளில் தடுப்புக்காவலில் சிறை வைக்கப்பட்டிருந்தவர். தமிழுக்காகவும் இனத்துக்காகவும் சிறை செல்வதை பெருமையாகக் கருதியவர்.

தமிழரசுக் கட்சியின் தலைவராக 1961, 1962, 1969 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மாநாடுகளின்போது ஒருமனதாக தெரிவுசெய்யப்பட்டவர் திரு. இராசமாணிக்கம். ஆறுவருடங்கள் கட்சியின் தலைவராகஇருந்து விடுதலை இயக்கத்தை வழி நடத்தியவர்.

தியாகம் இன்றேல் விடுதலையைக் காண முடியாது என்று அடிக்கடி கூறும் திரு. இராசமாணிக்கம், நேர்மை, நிதானம், கண்டிப்பு வாய்மை நிறைந்த அமைதிமிக்க தலைவராக திகழ்ந்தார்.

### இளைஞர் பேரவை கூடுகிறது!

அடுத்த நடவடிக்கைபற்றி ஆராய்வதற்காக தமிழ்இளைஞர் பேரவையின் செயற்குழுக்கூட்டம் 13.10.74 அன்று காலை தமிழர் கூட்டணியின் யாழ் தலைமை செயலகத்தில் நடைபெறுகிறது.

# இராசமாணிக்கம்!

## தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி இரங்கல் அறிக்கை!

"திரு. எஸ். எம். இராசமாணிக்கத்தின் திடீர் மறைவு எம்மைப் பேரதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. அவரது மறைவினால் தமிழ் மக்கள் ஒரு நிதானமும் தீர்க்க தரிசனமும் உள்ள அரசியல் வாதியை இழந்து விட்டனர். அவர் தமிழ் மக்களிடையே இருந்த பிரதேச வேறுபாடுகளை ஒழிப்பதில் தீவிரமாக உழைத்து — அதன் வெற்றிக்கும் காரணமாக இருந்தார். திரு. இராசமாணிக்கத்தின் மறைவு பொதுவில் தமிழினத்துக்கும் — குறிப்பாக கிழக்கிலங்கை மக்களுக்கும் நிறைவு செய்ய முடியாத பேரிழப்பாகும்.—"

—இவ்வாறு தமிழ்தொழிற்சங்கக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. இ. பேரின்பநாயகம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டார்.

### இ. தொ. கழக செயலாளர் அனுதாபம்!

இ. தொ. கழகப் பொதுச் செயலாளர் சட்டத்தரணி திரு. மு. பரராசசிங்கம் இராசமாணிக்கம் மறைவு குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியில்—"இராசமாணிக்கம் தமிழ் மக்களின் இலட்சியங்களுக்காக விசுவாசமாக உழைத்த ஒரு தனிப்பெரும் தலைவர். அவர் மறைவு தமிழினத்திற்கு ஒரு பெரும் சோதனையாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பொழுது எதிரொலிக்கிறது!

செல்லமகால்

சந்தர்ப்பம்—சூழ்நிலையினால் குற்றம் செய்தவர்கள் அதன் பலாபலன்களின் எதிரொலிக்கு தப்பமாட்டார்கள் என்பதை விளக்கும் சிறந்த குடும்பச் சித்திரம்.

சிவாஜி, கே. ஆர். விஜயா,

எஸ். எஸ். ராஜேந்திரன், நாகேஷ்,
லட்சுமி - சிவகுமார் - ஜோதிலட்சுமி,
காலஞ்சென்ற ரி. எஸ். பாலையா நடித்த-

கே. பாலசந்தரின் எதிரொலி

மீண்டும் ஒரு முறை பார்க்க அரிய சந்தர்ப்பம்!

கெயிட்டி

○ எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி . . .
○ ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா . . .

சிவாஜி — சௌகார் ஜானகி
காலஞ்சென்ற ரி. எஸ். ரங்கராவ் நடித்த-

படிக்காத மேதை

18-ம் திகதி வெள்ளி முதல்

கிங்ஸ்லி

விஷ்ணுவர்தன, சந்திரகலா நடித்த-
சித்திரலாய அளிக்கும்

ஸ்ரீதரின் அலைகள்

25-ம் திகதி வெள்ளி முதல்

கெப்பிட்டல்

சிவாஜி, லட்சுமி, விஜயகுமாரி, எஸ. வரலட்சுமி,
முத்துராமன், சிவகுமார் நடித்த-
தென்னகத்திலேயே முதன்முதலாக தயாரித்த "சினிமாஸ்கோப்"
தமிழ் வண்ணச் சித்திரம்.

ராஜ ராஜ சோழன்

4-வது வாரம்

பிளாஸா திரையில்

சிவாஜி ஜெயலலிதா, சௌகார் ஜானகி, சந்திரபாபு

-நடித்த- நீதி [ஈஸ்ட்மென் கலர்]

இப்பொழுது காட்சியளிக்கிறது

லிடோ [யாழ்நகர்]

சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த-

கே பாலசந்தரின் எதிரொலி

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகாமாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974ம் வருடம் ஒக்டோபர் மாதம் 13-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு ப்பிரசுரிக்கப்பட்டுள்ளது.